# தெரிந்தால் சமயத்தில் உதவும்

எஸ். நவராஜ் செல்லையா
M.A., D.P.E., M.P.ED.,

சசி

# தெரிந்தால் சமயத்தில் உதவும்


மூன்று முறை தேசிய விருது பெற்ற நூலாசிரியர்

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**

M.A., M.P.Ed., Ph.D., D.Litt. D.Ed., FUWAI,



வெள்ளிவிழா ஆண்டு 1970-95

ராஜ்மோகன் பதிப்பகம்

8, போலீஸ் குவாட்டர்ஸ் ரோடு,
தி. நகர், சென்னை-600 017.

முதற்பதிப்பு : 1988
இரண்டாம்பதிப்பு : 1996

விலை ரூபாய் 10-00

கிரேஸ் பிரிண்டர்ஸ்
சென்னை-17.

# முன்னுரை

'தெரிந்தால் சமயத்தில் உதவும்' என்று இந்த நூலுக்குப் பெயர் சூட்டியிருக்கிறேன்.

விளையாட்டு என்பது யாரும் கலந்து கொள்ளலாம் என்கிற சிறப்பான பெருமையை உடையது. மனம் விரும்பி ஈடுபடுகின்ற அனைவரும், மனமார்ந்த மகிழ்ச்சியில் திளைக்கின்றார்கள், மேம்பாடு அடைகின்றார்கள் என்பது நாம் அனைவரும் காண்கின்ற உண்மை நிகழ்ச்சியாகும்.

ஆனால், விளையாட்டு என்பது விலங்குகள் அலைவது போன்ற செயல் முறைகள் அல்ல என்பதைத் தான், இதில் பங்கு பெறுபவர்களும், பார்வையாளர்களாகிய பொதுமக்களும் உணர்ந்து கொள்ள மறுக்கின்றார்கள்.

பல விஞ்ஞானக் கூறுகளின் சிறந்த தொகுப்பு தான் விளையாட்டுக்கள் என்ற உண்மை வெளியாகி எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. என்றாலும் நமது மக்கள் விளையாட்டு என்பது வீண் நேரத்தைக் கழிக்கும் ஒரு திமிரான செயல் என்றும், இது நம் நாட்டுக்குத் தேவை யற்றது என்கிற பொய்யான வாதத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு புலம்பி மகிழ்கின்ற நடைமுறை செயல்களில் தான் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றார்கள்.

பொது மக்களை வழிநடத்தும் பிரதிநிதிகள் கூட இந்தக் கருத்திலே புரண்டு கொண்டிருப்பதால் தான், நமது நாட்டில் விளையாட்டுத்துறை இன்னும் வளர்ச்சி பெறாத ஊன நிலையில் உழன்று கொண்டிருக்கிறது.

விரைக, உயர்க, வலிமை பெறுக என்பது தான் விளையாட்டு உலகின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

ஒரு மனிதன் அல்லது ஒரு பெண், தனது வலிமை மிகுந்த வாலிப காலத்தில் எந்த அளவு திறமையும் வலிமையும் பெற்றிருக்கிறோம் என்று அறிந்து கொள்ள உதவும் வாய்ப்புகள் தான் விளையாட்டுகளாகும். எந்தவித செலவும் இல்லாமலேயே, சுயகட்டுப்பாடுடன், சுய சோதனை செய்து தெரிந்து கொள்கின்ற இனிய வாய்ப்புக்கள் நிறைந்தவை விளையாட்டுகளாகும்.

'ஒவ்வொரு விளையாட்டும் ஒவ்வொரு கடல்' என்கிற அளவுக்கு விளையாட்டுக்கள் நுணுக்கமானவை; விஞ்ஞான பூர்வமாக வளர்ந்தவை. ஒவ்வொன்றின் அணுகு முறைகளே தனித்தன்மை பெற்றவை என்று உலகத்து அறிஞர்களே ஒத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

வெள்ளத்தை வழிப்படுத்தி ஒழுங்குற ஓடச் செய்ய உதவும் கரைகள் போல, விளையாட்டுக்களை வழிநடத்திச் செல்ல விதிமுறைகள் அவ்வப்போது தோன்றியிருக்கின்றன. அவற்றைக் கண்காணிக்க, மேம்படுத்த, தலைமைக் கழகங்கள் அவ்வப்போது உருவாகி இருக்கின்றன.

விளையாட்டுகளில் ஈடுபட்ட வீரர்கள், வீராங்கனைகள் செய்த தியாகங்கள், தீரச்செயல்கள், வெற்றி வாகைகள், விதண்டா வாதங்கள், விமரிசனங்கள் பல உள்ளன

அவற்றிலே சுவையான செய்திகளையெல்லாம் தொகுத்து, தெரிந்தால் சமயத்தில் உதவும் என்று தலைப்பிட்டு, அழகிய நூலாக உங்கள் கைகளில் அளித்திருக்கிறேன்.

பல ஆண்டுகளாக, விளையாட்டுத்துறை நூல்கள், எழுதிக் கொண்டு வருகின்ற வேளைகளில், எனக்குத் தெரியாத

அதே சமயத்தில் தெரிந்த சுவையான நிகழ்ச்சிகளையெல்லாம், சாதனைக் குறிப்புக்களையெல்லாம் சேர்த்து வைத்திருந்தேன்.

இன்று பல தேர்வுகளில் பாடமாக வைக்கப் பெறுகின்ற பேற்றினையும், பல வேலை வாய்ப்பு நிலையங்களில் விளையாட்டு பற்றிய வினாக்கள் எழுப்பிச் சோதிக்கின்ற வாய்ப்பினையும் விளையாட்டுத்துறை பெற்று, வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது

மாணவர்கள் பொதுமக்கள் இத்தகைய குறிப்புக்களை அறிந்து வைத்துக்கொண்டால் நிச்சயம் சமயத்தில் உதவும்.

நினைவுகளில் வைத்துக் கொள்ளத்தான் வேண்டுமா என்றால், கட்டாயம் என்று இல்லை. சுவையான செய்திகளைப் படிக்கும் போது மனதுக்கு சுகமாக இருக்கும். உணர்வுகளில் வீரம் பிறக்கும். நாமும் இப்படி இருக்க வேண்டும்’ என்ற ஓர் இலட்சியம் உதிக்கும். நடைமுறைக்கு இழுத்துக் கொண்டு வருகின்ற விவேகமும் வந்தாலும் வரலாம்.

ஆக, பல நல்ல சேதிகளைப் படித்துத் தெரிந்து கொள்ள ஒரு நல்ல நூலைப் படித்திருக்கிறோம் என்ற ஒரு திருப்தியாவது உங்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே, இந்த நூலை உங்களிடம் கொடுத்திருக்கிறேன்.

மிகவும் அரிதின் முயன்று தொகுத்தக் குறிப்புக்கள் இவை. விளையாட்டுத்துறையில் இத்தனை செய்திகளா என்று நீங்கள் ஆச்சரியப்படுவதும் எனக்குப் புரிகிறது.

தூரத்தில் நிற்கின்ற ஒரு யானையின் துதிக்கை மட்டும் தான் தெரிகிறது என்று ஒருவர் கூறினால், அந்தத் துதிக்கைக்கு உரித்தான யானை எவ்வளவு பெரியது என்று யாரறிவார்? விளையாட்டுகளின் மகத்துவம், யானை பார்த்த குருடர்கள் நிலையில் இன்று இல்லை.

விழியுள்ளவர்கள் பார்க்கின்ற யானையாக இன்று விளையாட்டுத்துறை வந்திருக்கிறது. விழிப்புணர்ச்சியும் எழுச்சியும் இன்று இளைஞர்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறது. வருங்காலம் நல்ல வலிமையுடையவர்களுக்கான காலம்; சோம்பேறிக் கூட்டம் இனி சொகுசு வாழ்க்கை வாழ முடியாது என்று உணர்த்தி வருகின்ற எதிர்காலத்தை எதிர் கொள்ள விளையாட்டுத்துறை தான் வழிகாட்டும் என்ற நம்பிக்கையில், இந்த உலகம் ஏற்றுக் கொண்டு செயல்படும் காலமாக முன்னேறி வருகிறது

நாட்டுக்காக இல்லையென்றாலும், நமக்காகவாவது உடலைத் திடமாக, திறமாக தரமாக வைத்துக் கொள்வோம் என்ற உறுதியை இன்றே எடுத்துக் கொள்வோம்

அதற்கேற்ற ஆதாரங்களை நிறைய வைத்திருக்கின்ற இந்த நூலை உங்களிடம் கொடுத்திருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நிறைய பயன்களை வழங்கும் இந்த நூலை அழகுற அச்சிட்டுத் தந்த கிரேஸ் பிரிண்டர்சுக்கும், ஆக்க வேலைகளுக்கு உதவிய ஆர். ஆதாம் சாக்ரடீசுக்கும் எனது இதயபூர்வமான நன்றி

எனது விளையாட்டுத்துறை இலக்கிய நூல்களைப் படித்து, எனக்கு ஆதரவளித்து வரும் அன்பர்கள் அனைவருக்கும் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஞானமலர் இல்லம்
சென்னை - 17

எஸ். நவராஜ் செல்லையா
22 - 2 - 83

# ஆசிரியரின் பிற நூல்கள்

1 விளையாட்டுக்களின் விதிகள்
2 விளையாட்டுக்களின் கதைகள்
3 விளையாட்டு விழா நடத்துவது எப்படி ?
4 விளையாட்டுக்களில் விநோதங்கள்
5 விளையாட்டுக்களில் வினாடி வினா விடை
6 விளையாட்டு விருந்து
7 கால் பந்தாட்டம்
8 கைப் பந்தாட்டம்
9 கூடைப் பந்தாட்டம்
10 வளைகோல் பந்தாட்டம்
11 கேரம் விளையாடுவது எப்படி ?
12 ஒலிம்பிக் பந்தயத்தின் கதை
13 நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம்
14 நீங்களும் உடலழகு பெறலாம்
15 பெண்களும் பேரழகு பெறலாம்
16 எதற்காக உடற்பயிற்சி செய்கிறோம் ?
17 தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள்
18 கூடி விளையாடும் குழு விளையாட்டுக்கள்
19 பயன் தரும் யோகாசனப் பயிற்சிகள்
20 பாதுகாப்புக் கல்வி
21 உடலழகுப் பயிற்சி முறைகள்
22 விளையாட்டுத் துறையில் ஆங்கிலம் — தமிழ் அகராதி
23 நீங்களும் உயரமாக வளரலாம்
24 நீங்களும் நோயில்லாமல் வாழலாம்
25 விளையாட்டுத் துறையில் சொல்லும் பொருளும்
26 கிரிக்கெட் ஆட்டத்தில் கேள்வி பதில்
27 கிரிக்கெட் ஆட்டத்தின் கதை
28 ஒரு நூறு சிறு விளையாட்டுக்கள்
29 பொழுது போக்கு விளையாட்டுக்கள்

30 வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள்
31 விளையாட்டு உலகில் வீரக் கதைகள்
32 சதுரங்கம் விளையாடுவது எப்படி ?
33 பூப்பந்தாட்டம்
34 மென் பந்தாட்டம்
35 வளையப் பந்தாட்டம்
36 கோ கோ ஆட்டம்
37 சடுகுடு ஆட்டம்
38 இந்திய நாட்டுத் தேகப் பயிற்சிகள்
39 General knowledge in sports and games
40 Quotation on sports and games
41 How to break ties in sports and games
42 செங்கரும்பு
43 நல்ல நாடகங்கள்
44 நல்ல கதைகள் I
45 நல்ல கதைகள் II
46 நல்ல கதைகள் III
47 நல்ல பாடல்கள்
48 நல்ல நல்ல கதைப் பாடல்கள்
49 தெய்வ மலர்
50 கடவுள் கைவிடமாட்டார்
51 பண்பு தரும் அன்புக் கதைகள்
52 [illegible] விளையாடுகின்றன
53 மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி ?
54 நகைச்சுவை நாடகங்கள்
55 [illegible] நாடகங்கள்
56 மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள்
57 ஒலிம்பிக் பந்தயத்தின் கதை
58 விளையாட்டுக்களுக்குப் பெயர் வந்தது எப்படி ?
59 வாழ்க்கைப் பந்தயம்
60 விளையாட்டு ஆத்திசூடி
61 இந்தியாவில் ஆசிய விளையாட்டுக்கள்

# தெரிந்தால் சமயத்தில் உதவும்

1) ஆண்கள் ஆட்டத்தில் பயன்படுகின்ற கிரிக்கெட் பந்தின் கனம் $5\frac{1}{2}$ அவுன்சிலிருந்து $5\frac{3}{4}$ அவுன்சு வரை இருக்க வேண்டும்.

பெண்கள் ஆடும் கிரிக்கெட் ஆட்டத்தில் பயன்படுகின்ற பந்தின் கனம் 5 அவுன்சுகளாகும்.

❋ ❋ ❋

2) கிரிக்கெட் ஆட்டத்தில் பயன்படுகின்ற மூளைக் கம்பின் (Stump) உயரம் தரையிலிருந்து 28 அங்குலம் உயரம் இருக்கும்.

மூளைக்கம்புகளின் தலைமீது வைக்கப்படுகின்ற இணைப் பானின் (Bail) நீளம் $4\frac{3}{4}$ அங்குலமாகும்.

❋ ❋ ❋

3) கூடைப் பந்தாட்டத்தில் உள்ள வளையம் (Ring) தரையிலிருந்து 10 அடி உயரத்தில் பொருத்தப்பட்டிருக்கிறது. அந்த வளையம் 18 அங்குல விட்டமுடையது.

❋ ❋ ❋

4) இறகுப் பந்தாட்டத்தில் (Shuttlecock) பயன்படும் இறகுப் பந்தின் கனம் 73—85 குன்றிமணி (Gram) கனமாகும். அதில் 14லிருந்து 16க்குள்ளான எண்ணிக்கையில் இறகுகள் பொருத்தப்பட்டிருக்கும்.

* * *

5) ஒலிம்பிக் பந்தியத்தின் லட்சியம் விரைக (Citius) உயர்க (Altius); வலிவு பெறுக (Fortius) என்பதாகும். இந்த லட்சிய சொற்களை உருவாக்கித் தந்தவர் பாதிரியார் டிடியன் (Dition) என்பவர். இவர் பிரான்சு நாட்டிலுள்ள பாரிஸ் நகரத்தின் அருகாமையில் உள்ள ஒரு பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர்.

* * *

6) கால் பந்தாட்டத்தில் நடுவராகப் பணியாற்றப் போகின்றவர் ஏழு பொருட்களை தன்னுடன் கொண்டு செல்ல வேண்டும். பள்ளிக் கூடத்தில் மாணவர்கள் பேனா பென்சில் ரப்பர் போன்றவற்றை ஓசி கேட்பது போன்ற நிலைமையில் இருக்கக் கூடாது.

ஒரு விசில்; ஒரு நாணயம்; ஒரு கடிகாரம். ஒரு பந்து; ஒரு குறிப்பு நோட் புத்தகம்; ஒரு பென்சில்; ஆட்டக்காரர்களுக்குக் காட்டுகின்ற வண்ண அட்டைகள் (Cards).

* * *

7) குதிரைப் பந்தாட்டத்தில் ஆடப் பயன்படும் ஒரு குதிரையை 10,000 ஷில்லிங் கொடுத்து 1928ம் ஆண்டு ஒருவர் வாங்கினார். அந்தக் குதிரையின் பெயர் ஜூபிடர். வாங்கியவர் பெயர் ஸ்டீபன் சான்போர்ட்.

* * *

8) டென்னிஸ் பந்தாட்டத்தில் பயன்படும் பந்தின் கனம் 56'7 லிருந்து 58'5 கிராம் ஆகும். பந்தின் அனுமதிக்கப் பட்ட வண்ணம் வெள்ளையாக இருக்கலாம் அல்லது மஞ்சளாகவும் [Yellow] இருக்கலாம்.

* * *

9) டென்னிஸ் ஆட்டத்தை முதலில் கண்டுபிடித்தவர் என்ற பெருமையினைப் பெறுகின்றவர் **மேஜர் வால்டர் கிளாப்டன் விங்பீல்டு** என்பவர். இவர் டென்னிஸ் ஆட்டத்திற்கு முதன் முதலாகத் தந்திருந்த பெயர் ஸ்பாரிஸ்டிக் என்பதாகும்.

* * *

10) கைப்பந்தாட்டத்தைக் கண்டுபிடித்தவர் **வில்லியம் மோர்கன்** என்பவர். அவர் கண்டுபிடித்த ஆண்டு 1895. மோர்கன் தனது கண்டுபிடிப்பு ஆட்டத்திற்குக் கொடுத்திருந்த பெயர் **மின்டானெட்** என்பதாகும். அதை மாற்றி வாலிபால் (Volley Ball) எனும் பெயரிட்டவர் டாக்டர் A. T. ஹால்ஸ்டெட் என்பவராகும். இவர் அமெரிக்காவில் உள்ள ஸ்பிரிங்பீல்டு கல்லூரியைச் சேர்ந்தவராவார்.

* * *

11) ஓட்டப் பந்தயங்கள் நடக்கும் விளையாட்டு மைதானம் ஆங்கிலத்தில் 'ஸ்டேடியம்' [Stadium] என்று அழைக்கப்படுகிறது. அந்த ஸ்டேடியம் என்ற பெயர் ஸ்டேட் (Stade) என்ற சொல்லிலிருந்து தான்பிறந்தது. ஸ்டேட் என்ற கிரேக்கச் சொல்லுக்கு, 192 மீட்டர் தூரம் என்று அர்த்தமாகும். ஒலிம்பிக் பந்தயங்கள் கிரேக்க நாட்டில் ஆரம்ப காலத்தில் நடைபெற்ற போது, 192 மீட்டர் உள்ள தூரமே ஓட்டப் பந்தய தூரமாக அமைந்திருந்தது. அந்த

தூரத்தை உடைய இடம் அதே பெயரால் அழைக்கப்பட்டு, மாறி மருவி, ஸ்டேடியம் என்ற பெயரைப் பெற்று விட்டது

* * *

12) குத்துச் சண்டை போட்டியானது, முதன் முதலாக கி. மு. 688ம் ஆண்டில், கிரேக்கர்களால் நடத்தப் பெற்ற ஒலிம்பிக் பந்தயங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.

* * *

13) கிரிக்கெட் ஆட்டத்தில் பந்தடித்தாடும் விதத்தில் (Batting) புதுமையையும் பிறர் வியக்கும் வண்ணம் மறுமலர்ச்சியையும் புகுத்தி ஆடி, பந்தடித்தாடும் திறமையால் மட்டுமல்லாது, கிரிக்கெட் ஆட்டத்திற்கும் நல்ல புகழையும் சேர்த்துத் தந்த பெருமையை, வரலாற்றிலே பொருத்திச் சேர்த்த W. G. கிரேஸ் என்பவர். சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர் என்று புகழப்பட்ட W. G. கிரேஸ், தொழிலில் நல்ல டாக்டராக விளங்கியவர்.

* * *

14) கால் பந்தாட்டத்திலே, இந்தியா சிறந்து விளங்கிய காலமும் இருந்திருக்கிறது. 1956ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில், கால் பந்தாட்டப் போட்டியில் இந்தியக் குழு கலந்து கொண்டு, அரை இறுதிப் போட்டி (Semi Finals) வரை வந்து, நான்காவது இடத்தையும் பெற்றது என்பதைப் பார்க்கும் பொழுது மனதுக்கு சற்று தெம்பாக இருக்கிறது.

* * *

15) தற்போது, விளையாடப்படும் நவீன வளைகோல் பந்தாட்டம் (Modern Hockey) பிறந்த இடம் இங்கிலாந்து என்று வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

16) முகலாயப் பேரரசராக விளங்கிய மகா அக்பருக்கு மிகவும் பிடித்தமான ஆட்டம் குதிரைப் பந்தாட்டமாகும் (Polo). இந்த ஆட்டமானது நல்லதொரு முடிவினை உடனே எடுக்கவும், நினைவுறுத்திச் செயல்படவும், கட்டுப்பாட்டை வளர்க்கவும் உதவுகின்ற சிறந்த ஆட்டம் என்பது அக்பரின் அபிப்ராயமாகும். முகலாய அரசர்கள் தான், இந்த ஆட்டத்தை இந்தியாவுக்குக் கொண்டு வந்ததாகக் கூறப் படுகிறது. அவர்கள் போலோ என்னும் குதிரைப் பந்தாட்டத்தை சௌகான் (Chaughan) என்று அழைத்து ஆடினர்.

❋ ❋ ❋

17) சிறந்த விளையாட்டுவீரர் என்பதற்காக 'அர்ஜுனு விருது' நம்நாட்டில் தரப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் முன், அந்த ஆட்டக்காரரை, நாட்டின் தேசிய விளையாட்டுக் கழகம் (National Sports Federation) அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும். அந்த ஆட்டக்காரரின் கடந்த மூன்றாண்டுகளில் மேற்கொண்ட திறமையான ஆட்டத்தை யும், நடப்பு ஆண்டில் நிகழ்த்தியிருக்கின்ற சிறந்த சாதனையை யும் குறிப்பிட்டுத்தான். தேசிய விளையாட்டுக் கழகம் பரிந்துரை செய்யும்.

❋ ❋ ❋

18) நீர்ப்பந்தாட்டப் போட்டியில் [Water Polo]. ஒரு குழுவிற்கு 7 ஆட்டக்காரர்கள் இருந்து ஆட வேண்டும்.

❋ ❋ ❋

19) கோல்ப் ஆட்டத்தில் ஆடப் பயன் படுகின்ற மைதானத்தின் நீளம் 5000 கெஜத்திலிருந்து 7000 கெஜம் வரை இருக்கும்.

20) ஒலிம்பிக் பந்தயத்தில் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளத் தகுதி பெற்ற இரு இந்தியர்கள் மில்காசிங் [400 மீட்டர் ஓட்டம்]. G. S. ரந்தாவா என்பவர் (110 மீட்டர் தடை தாண்டி ஓட்டம்). இதில், மில்காசிங் பழைய ஒலிம்பிக் சாதனையை முறியடித்து ஓடியும், நான்காவது இடத்தைத்தான் பெற முடிந்தது. நமக்கு அதிர்ஷ்டமில்லை.

❋ ❋ ❋

21) கைப்பந்தாட்டத்தில், ஆண்கள் ஆடும் ஆட்டத்தின் போது கட்டப்படுகின்ற வலையின் உயரம் 7 அடி 11⅝ அங்குலம்.

பெண்கள் ஆட்டத்தின் வலையின் உயரம் 7 அடி 4.1 அங்குலம்.

❋ ❋ ❋

22) கபாடி ஆட்டத்தின் மொத்த நேரம் 40 நிமிடங்கள். ஒரு பகுதிக்கு 20 நிமிடம் என்று 2 பகுதிகள் ஆடவேண்டும். இடைவேளை நேரம் 5 நிமிடங்களாகும்.

❋ ❋ ❋

23) கால் பந்தாட்டத்தில் ஒரு குழுவிற்கு 11 ஆட்டக்காரர்கள் தான் இருந்து ஆடவேண்டும் என்று நிர்ணயம் செய்யப்படுகின்ற விதி 1870 ம் ஆண்டில் தான் ஏற்படுத்தப்பட்டது.

❋ ❋ ❋

24) மாநிலங்களுக்கிடையே நடைபெறுகின்ற ஆட்டத்திற்கான ரஞ்சித் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி 1934ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

25) 1904ம் ஆண்டு செயின்ட்லூயிஸ் எனுமிடத்தில் நடந்த மூன்றாவது ஒலிம்பிக் பந்தயத்தில், குத்துச்சண்டை போட்டி (Boxing) முதன் முதலாக இணைக்கப்பட்டது.

❋ ❋ ❋

26) ஒலிம்பிக் பந்தயங்களில் அதிகமான தங்கப்பதக்கங்களை வென்றவர் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த பாவோநர்மி என்பவர். அவர் வென்ற தங்கப்பதக்கங்கள் 12, அவை தனிப்பட்ட ஓட்டத்திலும் குழுப் போட்டிகளிலும் கலந்து கொண்டு பெற்றவைகளாகும்.

❋ ❋ ❋

27) தனிமனிதனாக, ஒலிம்பிக் பந்தயங்களில் அதிகத் தங்கப்பதக்கங்கள் வென்றவர் ராய்எவ்ரி எனும் அமெரிக்கர். அவர் வென்ற தங்கப்பதக்கங்கள் 10. அவருக்கு மனிதத் தவளை என்று பட்டப்பெயர் உண்டு.

❋ ❋ ❋

28) ஆண்களுக்கான பென்டாதலான் நிகழ்ச்சிகள் ஒலிம்பிக்கில் நடப்பவை. நீளத்தாண்டல், தட்டெறிதல், வேலெறிதல், 1500 மீட்டர் ஓட்டம், 200 மீட்டர் ஓட்டம்.

தற்போது புதிய பென்டாதலான் என்று ஏற்படுத்தப் பட்டிருக்கிற 5 போட்டிகளுக்கான நிகழ்ச்சிகள் : குதிரையேற்றம், கத்திச்சண்டை, துப்பாக்கி சுடுதல், நீந்துதல், ஓட்டம் என்று நடைபெறுகின்றன.

❋ ❋ ❋

29) கிரேக்கத்தில் நடைபெற்று வந்த பழைய ஒலிம்பிக் பந்தயத்தை தடை செய்து அழித்தவர் முதலாம் தியோடசிஸ்

என்ற ரோம் நாட்டு சக்கரவர்த்தி. தடைசெய்து நிறுத்திய ஆண்டு கி. மு. 394ம் ஆண்டு.

அதே கிரேக்க மண்ணில், ஏதென்ஸ் நகரத்தில் புதிய ஒலிம்பிக் பந்தயத்தைத் தோற்றுவித்து நடத்திப் புகழ் பெற்றவர் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பியரி கூபர்ட்டின் பிரபு. புதிய ஒலிம்பிக் பந்தயம் தொடங்கிய ஆண்டு 1896, ஏப்ரல் மாதம் 6ம் நாளாகும்.

* * *

30) வளைகோல் பந்தாட்டத்தில் (Hockey) மிகச் சிறந்த ஆட்டக்காரர் என்று உலகம் போற்றிப் புகழும் பெருமை பெற்ற தயான்சந்த் என்பவர், முதன் முதலில் இந்தியாவின் பிரதிநிதியாக விளையாடச் சென்றபோது ராணுவத்தில் லான்சி நாயக்காக இருந்தார்.

அவர் சிறப்பாக ஆடியது கண்டு படிப் படியாக உயர்வுகள் பெற்று, மேஜர் என்ற பதவியில் அமர்த்தப் பட்டார். உண்மை உழைப்பு உயர்வினைத்தரும் என்பதற்கு சான்றாகத் திகழ்கிறார் மேஜர் தயான் சந்த் அவர்கள்.

* * *

31) மேசைப் பந்தாட்டத்தில், மட்டையினால் அடிப் பட்டுப் போகும் பந்தின் வேகமானது மணிக்கு 60 மைல் என்று கண்டறிந்திருக்கின்றார்கள். அவ்வளவு விரைவாக பந்தடிக்கும் வீரர் சுவாங் டிசி டங் (Chuang Tse Tung) என்பவர். இவர் 1961, 1963, 1965 ஆகிய மூன்று ஆண்டு களில் உலக மேசைப்பந்தாட்ட வீரராக வெற்றி பெற்றவரா வார்.

* * *

32) பூப்பந்தாட்டத்தில் அர்ஜுனா விருது பெற்றவர்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த கரீம், கர்னாடகா மாநிலத்தைச் சேர்ந்த ஜெயபட்மா.

* * *

33) கால்பந்தாட்டத்தில் உள்ள இலக்குப்பகுதியில் (Goal) குறுக்குக் கம்பத்தை (Cross Bar) 1875ம் ஆண்டு தான் முதன் முதலாகப் பயன்படுத்தினார்கள். அதற்கு முன், நாடாக்கள் (Tapes) தான் குறுக்குக் கம்பமாகப் பயன் பட்டிருக்கின்றன.

* * *

34) கிரேக்கத்தில் நடைபெற்ற பழைய ஒலிம்பிக் பந்தயங்களைத் தடை செய்து நிறுத்தி அழித்தவர், ரோம் நாட்டை ஆண்ட முதலாம் தியோடசிஸ் என்னும் சக்ரவர்த்தி. தடை செய்த ஆண்டு கி. பி. 394. அவ்வாறு தடை செய்யுமாறு அறிவுரை தந்தவர் செயின்ட் அன்புரோஸ் எனும் பாதிரியார் ஆவார்.

* * *

35) கிரிக்கெட் ஆட்டத்தில் Hat Trick என்றொரு சொல் உண்டு. அதற்கு அந்தப் பெயர் ஏன் வந்தது என்றால், தொடர்ந்தாற் போல் பந்தெறிந்து (Bowling) மூன்று விக்கெட்டுகளை அடுத்தடுத்து எடுத்தால், அதற்குப் பரிசாக, ஒரு தொப்பியைப் (Hat) பரிசாக அளித்தனர். அதனால் தான் அந்த சாதனைக்கு Hat trick என்ற பெயர் வந்தது. முதன் முதலாக இவ்வாறு பரிசு கொடுத்த ஆண்டு 1858 என்று வரலாற்றுக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

* * *

36) உலகத்திலேயே மிகப் பெரிய நீச்சல் குளம் என்ற புகழினைப் பெற்றிருப்பதன் பெயர் ஆர்திலப் குளம் (Orthlieb Pool) என்பதாகும். இது மொராக்கா தேசத்தில் காசா பிளாங்கா எனும் இடத்தில் இருக்கிறது. இந்த நீச்சல் குளத்தின் நீளம் 480 மீட்டர். அகலம் 75 மீட்டர்.

❋ ❋ ❋

37) கி. பி. 1530ம் ஆண்டுக்கு முன்னர் இத்தாலியில் உள்ள பிளோரன்ஸ் பகுதியில் ஆடிவந்த ஒருவகைக் கால் பந்தாட்டத்தில் ஒரு குழுவிற்கு 26 ஆட்டக்காரர்கள் இருந்து ஆடினர். தற்போது ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை 11 பேர் ஆகும்.

❋ ❋ ❋

38) இரும்புக்குண்டு எறியும் போட்டியில் (Shot put) 70 அடிக்குமேல் முதன் முதலாக எறிந்தவர் ராண்டிமேட்சன் (Randy Matson) எனும் அமெரிக்கர் ஆவார்.

❋ ❋ ❋

39) கூடைப் பந்தாட்டத்தில் பீச் பழக் கூடைகள் தான் ஆரம்ப காலத்தில் பந்தெறியும் இலக்காகப் பயன்படுத்தப் பட்டன. 1891ம் ஆண்டு தான் ஆட்டம் தொடங்கியது. 1900ம் ஆண்டில், பழக்கூடைகளை இலக்காகப் பயன் படுத்துவதிலிருந்து நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக இரும்பு வளையத்தை மாட்டினர்கள் அதன் கீழ், அடி திறந்த வலையையும் கட்டி விட்டார்கள்.

❋ ❋ ❋

40) மூன்று முறை உலகநாடுகளுக்கிடையே நடக்கும் கால்பந்தாட்டப் போட்டியில் வென்று வெற்றிக்கோப்பையைப்

பெற்றிருக்கும் நாடு பிரேசில் ஆகும். அந்த நாட்டில் கால்பந்தாட்டம் காலுன்றிப் பரவி செழிக்கத், தொடக்க நாட்களில் பாடுபட்டவர் சார்லஸ் மில்லர் (Charles miller) என்பவராவார்.

* * *

41) ஓட்டப்பந்தயம் மற்றும் தாண்டும் எறி பந்தயங்களின் நேரமும் தூரமும் அளந்திட, எலக்ட்ரானிக் மூலம் அளக்கும் சாதனங்கள், 1972ம் ஆண்டு மியூனிக்கில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களில் தான் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டன.

* * *

42) இங்கிலாந்து நாட்டில் உள்ள புகழ்பெற்ற கிரிக்கெட் மைதானமான லார்டு எனும் மைதானம், தாமஸ் லார்டு என்பவர் பெயரைத் தாங்கியதாகும். இந்த மைதானத்தை வாங்கியும், நிர்வாகம் செய்தும் ஆரம்ப நாட்களில் சிறப்புறப் பணியாற்றியதால்தான், அவரது பெயர் அந்த மைதானத்திற்கே இடப்பட்டது. லார்டு 1787ம் ஆண்டு தான் நிறுவினார். இந்த மைதானம் ஆரம்ப நாட்களில் டார்சட் ஸ்கொயர் என்ற இடத்தில் இருந்தது. தற்போது இருக்கும் இடம் செயின்ட் ஜான்ஸ் உட்.

* * *

43) எடை தூக்கும் போட்டிகளில் ஒலிம்பிக் பந்தயங்களில் அதிகமான தங்கப்பதக்கங்களை வென்றிருக்கும் நாடு ரஷ்யாவாகும். உலகிலேயே அதிக எடை தூக்கும் வீரர் என்னும் புகழ் பெற்றவர் வாசிலி அலெக்சிவ் என்பவராவார். இவரும் ரஷ்யர் தான்.

44) கைப்பந்தாட்டத்தின் இந்திய தலைமைக்கழகம் (VBI) 1951ம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இந்திய தேசியக் கைப்பந்தாட்டப் போட்டி சென்னை நகரில் 1952ம் ஆண்டு நடத்தப் பெற்றது.

❋ ❋ ❋

45) பூப்பந்தாட்டத்தில் (Ball Badminton) மாற்றாட்டக் காரர்கள் எத்தனை பேர் என்ற வினாவுக்கு, மாற்றாட்டக் காரர்களே இல்லை என்பதே விடை என்று பலர் கூறுகிறார்கள். ஆனால், ஒரு குழுவிற்கு 2 பேர்களை அனுமதிக்கலாம் என்ற விதி முறைகளுடன், ஒரு சில போட்டிகளில் ஆட அனுமதித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

❋ ❋ ❋

46) கிரிக்கெட் ஆட்டத்தில் இரண்டு விக்கெட்டுகளுக்கும் இடையே உள்ள தூரம் 22 கெஜம் என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான். கிரிக்கெட் ஆட்டத்தில் ஆடும் எல்லையை [Boundary] எவ்வளவு தூரத்தில் அமைக்கலாம் என்றால், நாணயம் சுண்டுவதற்கு முன்னர் இரண்டு குழுத்தலைவர்களுடன் நடுவர்கள் கலந்துரையாடி எல்லையை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்று விதியில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

முதல்தர கிரிக்கெட் ஆட்டத்தில், இந்தியாவில் ஆட்டத்தின் எல்லையை 75 கெஜதூரத்தில் அமைக்கலாம் என்று ஏற்றுக்கொண்டு அமைக்கின்றனர். அதாவது, பந்தாடும் தரையின் [Pitch] நடுமையத்திலிருந்து 75 கெஜ தூரம் அளந்து போட்டிருக்கவேண்டும்.

❋ ❋ ❋

47) ஓடுகளப் போட்டிகளில் (Track and Field) பங்கு பெறுகின்ற ஒரு உடலாளர் [Athlete], தான் அணிந்திருக்கின்ற பனியனில் முன்னும் பின்னும், தனக்குரிய எண்ணை (Number) அணிந்து கொண்டிருந்தால்தான், போட்டியில் பங்கு பெற முடியும். பனியனில் உள்ள எண்ணின் அளவானது 6 அங்குல உயரமும் 1 அங்குல பருமனும் (மேற்படாமல்) உள்ளதாக அமைந்திருக்க வேண்டும்.

❋ ❋ ❋

48) கபாடி ஆட்டத்திலும், ஒரு குழு ஆட்டக்காரர்களாகிய 7 பேர்களையும் இன்னொரு குழு ஆட்டமிழக்கச் செய்துவிட்டால் (Out), அவ்வாறு செய்த குழுவிற்கு 'லோனு' என்று, அவரது குறிப்பேட்டில் குறிக்கப்படும். லோனு பெற்ற குழுவிற்கு 2 வெற்றி எண்கள் அதிகமாகக் கொடுக்கப்படும்.

கோகோ ஆட்டத்திலும் 'லோனு' உண்டு. ஆனால், அதற்காகத் தனியாக வெற்றி எண்கள் தரப்படுவதில்லை.

❋ ❋ ❋

49) பெண்கள் கைப்பந்தாட்டத்திலும், முதன் முதலாக 'அர்ஜுனு' விருது (Arjuna Award) பெற்ற பெண்மணி, ஆந்திராவைச் சேர்ந்த மியுனிலி ரெட்டி [Munili Reddy] என்பவராகும்.

❋ ❋ ❋

50) ஒரு தங்கப்பதக்கத்திற்காக நம்நாடு போராடிக் கொண்டிருக்கும்போது, ஒரே ஒரு இளைஞன் 7 தங்கப்பதக்கங்களை நீச்சல் போட்டியில் உலகசாதனைகளை நிகழ்த்தி வென்றான். அவ்வீரன் பெயர் மார்க்ஸ் பிட்ஸ், என்பதாகும். அவன் அமெரிக்க நாட்டினன்.

51) வளைகோல் பந்தாட்டத்தில் இந்தியா ஏழு முறை ஒலிம்பிக் பந்தயத்தில் வென்று தங்கப் பதக்கங்களை தொடர்ந்து வென்றிருக்கிறது. அந்த காலமானது 1928லிருந்து 1960 வரை. இப்பொழுதுள்ள நிலைமைதான் உங்களுக்குத் தெரியுமே!

❀ ❀ ❀

52) ஒவ்வொரு ஒலிம்பிக் பந்தயத்திலும் 22 நிகழ்ச்சிகளில் (Events) போட்டிகள் நடைபெறுகின்றன.

❀ ❀ ❀

53) அகில உலகக் கால்பந்தாட்டக் கழகம் (FIFA 1904ம் ஆண்டு மே 21ந் தேதி ஆரம்பிக்கக்கப்பட்டது.

அகில இந்திய கால்பந்தாட்டக்கழகம் 1937ம் ஆண்டு தொடங்கப் பெற்றது.

❀ ❀ ❀

54) வளைகோல் பந்தாட்டத்தில் இந்தியாவில் நடைபெறுகின்ற முக்கியமான முதல் தரப் போட்டிகளுக்குரிய பரிசுக் கோப்பையின் பெயர்கள்— பெய்ட்டன் கோப்பை, ஆகாகான் கோப்பை; D. C. M. சின்டியா தங்கக் கோப்பை, உபயதுல்லாகான் தங்கக் கோப்பை, பம்பாய் தங்கக் கோப்பை, நேரு தங்கக் கோப்பை, முருகப்பா தங்கக் கோப்பை.

❀ ❀ ❀

55) திருவாளர் இந்தியா (MR. INDIA) என்ற உடலழகுக்குரிய போட்டியில் அதிக முறை வென்று, பட்டம்

பெற்றவர் கமல் கிருஷ்ணான் பண்டாரி என்பவர். வங்காளத்தைச் சேர்ந்த இவ்வீரர் 1953, 54, 56, 57, 58 என்னும் ஆண்டுகளில் (5 முறை) வென்றிருக்கிருர்.

✵ ✵ ✵

56) 1950-51ம் ஆண்டில் நடைபெற்ற ஒரு கிரிக்கெட் போட்டியில், பம்பாய் கவர்னர் குழுவும் காமன் வெல்த் குழுவும் போட்டியிட்டது. அதற்குப் பம்பாய் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ராஜா மகாராஜா சிங் என்பவர். அப்பொழுது அவருக்கு வயது 72.

எழுபத்தி இரண்டு வயதிலும் கண் தெரிந்திருக்கிறது. கையில் வலிமை இருந்திருக்கிறது. ஆடவும் முடிந்திருக்கிறது. இந்தியாவில் இப்படியும் ஒரு அதிசய நிகழ்ச்சி நடந்திருக்கிறது பார்த்தீர்களா!

✵ ✵ ✵

எடையும் விடையும்

57) 'என்னுடைய உயரத்திற்கும் வயதிற்கும், நான் எத்தனை பவுண்டு எடை இருந்தால் நன்ருக இருக்கும்' என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்ளாதவர்கள் இந்த உலகில் யாருமே இல்லை. உடல் எடை சீராக இருந்தால்தான் சிறப்பாக செயல்பட முடியும். முடிந்த அளவு, நோய் வந்தாலும் விரைவில் குணம் பெற்றும் வாழ முடியும்.

அவரவர் உயரத்திற்கு ஏற்ற எடை எவ்வளவு என்பதை கீழே காணும் பட்டியல் தெளிவாகக் காட்டுகிறது. குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அவ்வப்போது அளந்து பார்த்துக் கொள்ளுங்கள்.

அதிக எடை இருப்பது எவ்வளவு தவறோ, அதுபோலவே குறைந்த எடைஇருப்பதும் தவறு. நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

உயரம் அடி கணக்கில் எடை கிலோ கணக்கில்

| அடி | அங்குலம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 5 | 0 | — — | 52.6 |
| 5 | 1 | — — | 53 5 |
| 5 | 2 | 58.3 | 54.9 |
| 5 | 3 | 59.6 | 56.8 |
| 5 | 4 | 60.9 | 58.1 |
| 5 | 5 | 62.0 | 59.4 |
| 5 | 6 | 64 5 | 61.2 |
| 5 | 7 | 66.3 | 63 1 |
| 5 | 8 | 68.3 | 64 5 |
| 5 | 9 | 70.1 | 66 3 |
| 5 | 10 | 72 9 | 68 0 |
| 5 | 11 | 73.7 | 63.4 |
| 6 | 0 | 75.7 | 71 2 |
| 6 | 1 | 78 | — — |

58) இதுவரை நடந்த ஒலிம்பிக் பந்தயங்களில் அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்குமே பதக்கங்கள் வெல்வதில் பெரும் போட்டியுள்ளது: ஆரம்பகாலத்தில் இருந்தே அமெரிக்கா அதிகமான பந்தயங்களில் வென்று வந்தாலும், 1956 1960, 1964, 1972 ம் ஆண்டுகளில் ரஷ்யாவே அதிகமாக வெற்றி பெறத் தொடங்கியது.

அப்படியானால், இரு நாடுகளும் பெற்ற வெற்றிப் பதக்கங்களின் பட்டியலைத் தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறது அல்லவா! இதோ!

| நாடு | தங்கப் பதக்கம் | வெள்ளி | வெங்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ரஷ்யா | 211 | 182 | 174 | 567 |
| அமெரிக்கா | 220 | 150 | 189 | 509 |

* * *

59) **தத்தித் தப்படித் தாண்டுதல் (Hop Step & Jump)** என்று அழைக்கப் பெற்ற போட்டி நிகழ்ச்சி தற்போது புதிய பெயரால் அழைக்கப்படுகிறது. அந்த புதிய பெயர் **மும்முறைத் தாண்டல் (Triple Jump)** என்பதாகும்.

தாண்டுவதில் புதிய நுணுக்கங்கள் அதிகமாகி, தத்துவதிலும், தப்படி போடுவதிலும், தாண்டிக் குதிப்பதிலும் ஏறக்குறைய ஓரே அளவு தூரம் வருவதால்தான், மும்முறைத் தாண்டல் எனும் பெயரைப் பெற்றிருக்கிறது.

* * *

60) ஓட்டப் பந்தயத்தில், தவறாக ஓடத் தொடங்கி விட்டால் **(False Start)** முதல் முறை மன்னிக்கப்படுகிறது. இரண்டாவது முறையும் அதே தவறைச் செய்தால், பந்தயத்திலிருந்தே வெளியேற்றிவிட வேண்டும் என்பது விதி.

கிரேக்க நாட்டில் பழங்காலத்தில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில், தவறாக ஓடத் தொடங்கியவர்களுக்கு சவுக்கடியே தண்டனையாகத் தரப்பட்டிருக்கிறது. தண்டனையின் கடுமையைக் கவனித்தீர்களா! அவ்வளவு கட்டுப்பாடும் உண்மைப் பற்றும் அக்காலத்தில் இருந்திருக்கின்றன.

61) 1959-60 ம் ஆண்டு, ஆஸ்திரேலியாவிற்கும் இந்தியாவுக்கும் இடையே கல்கத்தாவில் நடந்த டெஸ்ட் ஆட்டத்தில், M. L. ஜெய்சிம்மா எனும் ஆட்டக்காரர் ஒரு புதிய சாதனை புரிந்தார். அதாவது ஆட்டம் நடந்த 5 நாட்களிலும், பந்தடித்தாடிக் கொண்டிருந்தார் (Batting) என்பதாகும்.

❋ ❋ ❋

62) இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுக்குமிடையே முதன் முதலாக 1948-49ல் தான் டெஸ்ட் போட்டி ஆட்டம் தொடங்கப் பெற்றது. இந்திய குழுவிற்கு **லாலா அமர்நாத்தும்,** மேற்கிந்தியக் குழுவிற்கு **கோடார்டு** என்பவரும் குழுத் தலைவர்களாக இருந்தார்கள்.

❋ ❋ ❋

63) 'இந்தியக் கால் பந்தாட்டத்தின் மெக்கா' என்று கல்கத்தாவை ஆட்ட வல்லுநர்கள் அழைக்கின்றார்கள்.

❋ ❋ ❋

64) உலகத்தில் சிறந்த கால் பந்தாட்டக்காரர் எனும் புகழ் பெற்று விளங்குபவர் பிலி என்பவராவார். அவரைப் போலவே 1930-40ம் ஆண்டுகளில் சிறந்து விளங்கிய ஆனால் உலகப் புகழ் பெறாத இன்னொரு ஆட்டக்காரரும் இருந்திருக்கிறார். அவர் பெயர் **பிரான்ஸ் பிம்போ பின்டர்,** வியன்னாவைச் சேர்ந்தவர். பத்தாண்டுகளுக்குள் 1000 முறை இலக்குள் பந்தடித்து, வெற்றி எண்களைக் கொடுத்திருக்கிறார். இவரை பிலியின் முன்னோடி என்கிறார்கள்

65) அகில உலகப் பெண்கள் வளைகோல் பந்தாட்டக் கழகம் (Hockey Federation) 1926 ம் ஆண்டுதான் தொடங்கப்பட்டது.

❋ ❋ ❋

66) அகில உலக வளைகோல் பந்தாட்டத்தின் முதல் தலைவர் பால் லியூட்டி என்பவர். தற்போதைய தலைவர் ரேனி பிரான்ஸ்.

❋ ❋ ❋

67) கைப்பந்தாட்டமானது 1964ம் ஆண்டு டோக்கியோவில் நடந்த ஒலிம்பிக் பந்தயங்களில்தான் முதன் முதலாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

❋ ❋ ❋

68) கூடைப் பந்தாட்டம் 1936ம் ஆண்டு பெர்லினில் நடந்த ஒலிம்பிக் பந்தயங்களில்தான், முதன் முதலாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

❋ ❋ ❋

69) உலகக் கூடைப் பந்தாட்ட முதல் போட்டியானது 1950ம் ஆண்டு அர்ஜென்டினாவில் உள்ள போனக் ஏர்ஸ் என்னும் இடத்தில் நடைபெற்றது.

❋ ❋ ❋

70) குத்துச்சண்டைப் போட்டியில் 17 ஆண்டுகாலம் முடிசூடா மன்னன் என்ற புகழ்பெற்று, 'என்றும் ஜெயித்துக் கொண்டே இருப்பேன்' :என்று வீரம் பேசிக் கொண்டிருந்த

முகமது அலி, தன் வாழ்நாளில் மூன்ருவது முறையாகத் தோற்றிருக்கிருர். 36 வயது நிரம்பிய முகமது அலி 24 வயது இளைஞனை, லியான் ஸ்பிங்ஸ் என்பவரிடம் தோற்று தன் உலக வெற்றி வீரர் பட்டத்தை இழந்து விட்டார்.

* * *

71) நீளத்தாண்டும் போட்டியில், கால் உதைத்துத் தாண்டும் பலகையானது (Take off Board) 1900ம் ஆண்டுக்கு முன்னர், வகை வகையான அளவுகளில், அவரவர் விருப்பத்திற்கேற்ப வைத்துக் கொள்ளப்பட்டது. 1900ம் ஆண்டுதான், ஒரு திட்டவட்டமான விதிமுறை ஏற்பட்டு, பலகையின் நீளம் 4 அடியும் (1.22m) அகலம் 8 அங்குலமும் (.203m) இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

* * *

72) தடை தாண்டும் போட்டியில் (Hurdles) ஆண்களுக்கான போட்டிக்குரிய ஒரு தடையின் உயரம் 3 அடி 6 அங்குலம் (1.076மீ). பெண்களுக்குரிய போட்டித் தடையின் உயரம் 2 அடி 9 அங்குலம் (0.839மீ). ஒவ்வொரு போட்டியிலும் ஒருவர் 10 தடைகளைத் தாண்டியே ஓடியாக வேண்டும்.

* * *

73) குத்துச் சண்டைப் போட்டியில் போட்டியாளர் அணிந்து கொள்கின்ற கையுறையின் (Gloves) கனமானது 8 அவுன்சுகளாகும்.

74) குத்துச் சண்டை மேடை (Ring)யின் நீளம்20 அடி. அகலமும் 20 அடியாகும். மேடையைச் சுற்றி 3 வரிசையில் கயிறுகள் சுற்றி வளைத்துக் கட்டப்பட்டிருக்கும். சண்டை யிடும் மேடையானது கேன்வாஸ் அல்லது ரப்பரால் அமைக்கப்பட்டிருக்கும்.

* * *

75) டென்னிஸ் ஆட்டத் தொடக்கத்திலிருந்து முழு கால் சட்டை அணிந்துதான் எல்லா ஆட்டக்காரர்களும் விளையாடி வந்தனர். ஆனால் முதன் முதலாக அரைக்கால் சட்டை அணிந்து கொண்டு விம்பிள்டன் போட்டிக்கு ஆட வந்தவர் என்ற புகழைப் பெற்றவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பன்னி ஆஸ்டின் (Bunny Austin) என்பவர். அந்த ஆண்டு 1933 ஆகும்.

* * *

76) தேசிய அளவில் கைப்பந்தாட்டப் போட்டியில், பெண்களுக்கான போட்டிகளையும் ஏற்படுத்தியது 1952ம் ஆண்டு ஜபல்பூரில் நடந்த போட்டியின் போதுதான்.

* * *

77) மேசைப் பந்தாட்டம் எனப்படும் டேபிள் டென்னிஸ் ஆட்டமானது முற்காலத்தில் காசிமா (Gossima) பிங்பாங் (Ping Pong) என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தது.

* * *

78) மேசைப் பந்தாட்டத்திற்கான விதிகளை அமைப்ப தற்கேற்ற ஆக்கப் பணிகளில் ஈடுபட்டதோடல்லாமல், அதில

உலக மேசைப் பந்தாட்டக் கழகத்தையும் தோற்றுவித்து, முதல் தலைவராக ஆகி, அரும்பெரும் சேவை செய்து வருபவர் சர் ஐவர் மான்டேகு (Sir Ivor Montague) என்பவர் ஆவார்.

❋ ❋ ❋

79) நம் நாட்டில் கால் பந்தாட்டம் என்றால் Foot Ball தான். மேல் நாட்டில் ரக்பி ஆட்டத்தைத்தான் குறிக்கும். அதிலும் குறிப்பாக அமெரிக்காவில் ரக்பி ஆட்டத்தையே கூறுவார்கள். கால் பந்தாட்டத்தை அங்கெல்லாம் சாக்கர் (Soccer) என்றே கூறுகிறார்கள். அந்த வார்த்தையைக் கண்டு பிடித்தவர் என்ற புகழுக்குரியவர் இங்கிலாந்தைச் சேர்ந்த சார்லஸ் பிரௌன் (Charles Brown) ஆவார்.

❋ ❋ ❋

80) கால்பந்தாட்டப் போட்டியில் ஒவ்வொரு ஆட்டக்காரரும் சீருடை அணிந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். மேல் சட்டையில் அவரவருக்குரிய ஆடும் எண்ணை (Number) அணிந்துகொண்டுதான் ஆடவேண்டும். அப்படி ஆட வேண்டும் என்ற விதியானது 1939ம் ஆண்டுதான் உருவாக்கப்பட்டது.

❋ ❋ ❋

81) வளைகோல் பந்தாட்டத்தில் (Hockey) பக்கக் கோடுகளுக்கு வெளியே பந்து போய் விட்டால், மீண்டும் உள்ளே இட்டு ஆட்டத்தைத் தொடங்க பந்தை உள்ளுருட்டல் (Roll in) மூலமே முன்னர் ஆடி வந்தார்கள். அந்த விதியை மாற்றி, உருட்டிவிடுவதற்குப் பதிலாக, வளை கோலால் பந்தைத் தள்ளிவிடும் முறை (Push in) 1970ம் ஆண்டிலிருந்துதான் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

82) 1920ம் ஆண்டு ஆன்ட்வெர்ப் எனும் இடத்தில் ஒலிம்பிக் பந்தயம் நடந்தபோது தான், வளைகோல் பந்தாட்டம் ஒலிம்பிக் பந்தயங்களில் ஒரு போட்டியாக முதன் முதலாக இணைக்கப் பெற்றது. அந்த ஆண்டு, தங்கப்பதக்கங் களை வென்றவர்கள் இங்கிலாந்து நாட்டினர்.

பிரான்சு நாட்டினர்தான் இங்கிலாந்தை இறுதிப் போட்டியில் எதிர்த்து ஆட வேண்டியிருந்தது. பிரான்சு நாட்டு விளையாட்டு வீரர்கள் உடல் நலம் இல்லாது போனதால், அவர்கள் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளவே, இங்கிலாந்தே வென்றதாக அறிவிக்கப்பட்டது.

❋ ❋ ❋

83) கூடைப் பந்தாட்டப் போட்டியில், இந்திய தேசிய அளவில் நடக்கும் பெண்களுக்கான போட்டியில் வென்றவர் களுக்கு வழங்கப்படும் கேடயத்திற்குரிய பெயர் பசலத் ஜாப் டிரோபி (Basalat Jab Trophy).

❋ ❋ ❋

84) கூடைப் பந்தாட்டத்தைக் கண்டு பிடித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஜேம்ஸ் நெய் சுமித் அவர்கள். இது 1891—92ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள மசாசூஷூ செட்ஸ் நகரில் இருக்கும் ஸ்பிரிங் பீல்டு கல்லூரியில் முதன் முதலாக ஆடப்பட்டது.

❋ ❋ ❋

85) 1932ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில், மேட்டி ஜார்வின் (Matt jaervinnen) எனும் வீரர், வேலெறியும் போட்டியில் முதலாவதாக வந்து, தங்கப் பதக்கத்தை வென்றார். அந்த வீரனைப் பெருமைப்படுத்து

வதற்காக, 1952ம் ஆண்டு ஹெல்சிங்கி எனுமிடத்தின் ஒலிம்பிக் பந்தயம் நடத்தியபோது, அந்த வீரன் எறிந்த தூரத்தை நினைவு படுத்துவதற்காக ஒலிம்பிக் ஸ்டேடியத்தின் கோபுர உயரத்தை 288 அடி 6¾ அங்குலம் உயரமாக வைத்துக் கட்டினார்கள்.

நம் நாட்டிற்கு இப்படி ஒரு வாய்ப்பளிக்க ஒரு வீரன் எப்பொழுது தோன்றப் போகிறானோ தெரியவில்லை. நாமும் ஆவலுடன் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

* * *

86) ஒலிம்பிக் பந்தயத்தில் ஒலிபெருக்கி அமைத்து வீரர்களை அழைக்கும் முறையானது 1924ம் ஆண்டு பாரிசில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தின் போதுதான் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.

* * *

87) குத்துச்சண்டைப் போட்டியில் ஹெவிவெய்ட் எனும் பேரெடைப் பிரிவில் சண்டைபோடும் குத்துச்சண்டை வீரர்கள் கையில் அணிந்து கொள்ளும் கையுறையின் எடையானது 8 அவுன்சாகும். மற்ற பிரிவில் சண்டையிடும் வீரர்கள் அணியும் கையுறை 6 அவுன்சு எடையுள்ளதாகும்.

* * *

88) குத்துச் சண்டைப் போட்டியில் 1 ரவுண்டு சண்டை போடுவது என்றால் அதற்குரிய நேரம் 3 நிமிடங்கள் ஆகும். ஒரு ரவுண்டுக்கும் இன்னொரு ரவுண்டுக்கும் இடையில் உள்ள ஓய்வு நேரம் 1 நிமிடமாகும்.

89) கால் பந்தாட்டத்தில் ஒறுநிலைப்பரப்பு (Penalty Area) என்றொரு இடப்பரப்பு ஆடுகளத்தில் உண்டு. அதில் நின்று கொண்டு, தங்கள் இலக்கைக் காத்து ஆடும் கடுத்தாடுபவர்கள் கடுமையான குற்றம் இழைத்தால், அதற்குத் தண்டனையாக எதிர்க்குழுவினர் ஒறுநிலை உதை (Penalty Kick) என்றும் வாய்ப்பினைப் பெறுவார்கள். அத்தகைய வாய்ப்பானது 1891ம் ஆண்டுதான் முதன் முறையாக விதிகளுள் ஒன்றாக உருவாக்கப்பட்டது.

* * *

90) கால் பந்தாட்டத்தில் இலக்குக்குள் (Goal) பந்து அனுப்பப்படும்பொழுது, அது உள்ளே தான் போனதா என்று கண்டுபிடிக்க முடியாமல் நடுவர்கள் திண்டாடிக்கொண்டிருந்த காலமும் உண்டு. இலக்குக்குள் சென்ற பந்து அங்கே கிடந்து விட்டால், சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் போய் விடும் என்று ஆட்ட வல்லுநர்கள் கருதினார்கள்.

அதனால் இலக்கைச் சுற்றி வலை பின்னி விட்டால், போன பந்து வலைக்குள்ளே தான் கிடக்கும் என்று முடிவுக்கு வந்து விட்டனர். அதன்படி தென் இங்கிலாந்துக்கும் வட இங்கிலாந்துக்கும் 1891ம் ஆண்டு நடந்த போட்டியின் போது இலக்குக்கு வலை அமைக்கப்படும்முறை, முதன் முறையாக பின்பற்றப்பட்டது.

* * *

91) வளைகோல் பந்தாட்டத்தில் சிறந்த ஆட்டக்காரருக்கு விருதுகள் வழங்கி கௌரவித்திருக்கின்றார்கள். சிறந்த விருது அர்ஜுனா விருதாகும். ஆண்களில் முதன் முதலாக அர்ஜுனா விருதைப் பெற்றவர் பிரிதிபால்சிங் விருது பெற்ற ஆண்டு 1961. அதே ஆண்டில் பெண்களுக்கான அர்ஜுனா விருதினைப்பெற்ற முதல் வீராங்கனை ஆன்லூம்ஸ்டன் ஆவார்.

92) இந்தியா முதன் முதலாக வளைகோல் பந்தாட்டத்தில் ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொண்ட போது வெற்றி நாடாகப் புகழ் பெற்று வந்தது. அந்தக் குழுவுக்குத் தலைவராக இருந்து, தங்கப்பதக்கம் பெற்றுத் தந்த பெருமை அடைந்தவர் **ஜெயபால்சிங்** ஆவார். 1928ல் முதல் தங்கப் பதக்கம் பெற்றோம். 1978ல் நம் நிலை என்ன ? உலக நாடுகளில் ஏழாவதாக இருக்கிறோம் இல்லை, தள்ளப்பட்டிருக்கிறோம்.

❋ ❋ ❋

93) 1952ம் ஆண்டு இந்திய வளைகோல் பந்தாட்ட வீரர் ஒருவர் 'ஹெல்ம்ஸ்' விருதினைப் பெற்று உலக மகாவீரர் என்று கௌரவிக்கப்பட்டார். அந்த வீரரின் பெயர் K. D. சிங். ரூப்சிங், தயான் சந்த் அவர்களுக்குப் பிறகு, சிறந்த வளைகோல் பந்தாட்ட வீரர் என்று உலகப் புகழ்பெற்ற K. D. சிங். அவர் இளமையிலேயே மறைந்து போனாலும், அவரது புகழ் என்றும் மங்காது ஒளிர்ந்து கொண்டேயிருக்கும்

❋ ❋ ❋

## தாண்டிப் புகழ்பெற்றவர்கள்

94) உயரத் தாண்டும் போட்டியில் நான்கு முறையாக வீரர்கள் தாண்டுவதை நாம் பார்த்திருக்கிறோம். அத்தனை தாண்டும் முறைக்கும் பெயர் நமக்குத் தெரியும். அவற்றை முதல் முதலில் உண்டாக்கித் தாண்டியவர்கள் யார் என்பதை கீழே தந்திருக்கிறோம்.

| | உயரத்தாண்டும் முறை | கண்டுபிடித்தவர் |
|---|---|---|
| 1. | கிழக்கத்திய தாண்டும் முறை (Eastern cut) | மைக் ஸ்வீனி |
| ௨. | மேற்கத்திய தாண்டும் முறை (Western Roll) | ஜார்ஜ் ஹாரின் |

3. கம்புமேல் உருளும் முறை (Belly Roll) — தாவே ஆல்பிரிட்டன்

4. பாஸ்பரி தாண்டு முறை (Fossbury Style) — டிக்பாஸ்பரி

* * *

95) 1961ம் ஆண்டு காலின் ஜோன்ஸ் (Colin Jones என்னும் 15 வயது இளைஞன், ஒரு உலக சாதனையைச் செய்தான். கால் பந்தாட்டத்திலுள்ள பந்தை தலைக்கு மேலே உயர்த்திப் போட்டு அதனை 3412 தடவை தொடர்ந்தாற் போல் தலையாலே முட்டி முட்டி கீழே விழாது உயர்த்திய வாறு (Heading) ஆடியது தான் அந்த அற்புத சாதனை

அவன் இங்கிலாந்து நாட்டின் கியூன்ஸ் பெரில் என்னும் ஊரில் உள்ள ஒரு விளையாட்டு வீரன் ஆவான்.

* * *

**தேசியக் கோப்பைக்கான**

96) தேசிய கால்பந்தாட்டப் போட்டி (Federation cup) நடத்த வேண்டும் என்ற எண்ணம் 1976ம் ஆண்டு டார்ஜீலிங் நகரில் நடைபெற்ற அகில இந்திய கால் பந்தாட்டக் கழகத்தினர் கூடியிருந்த போது ஏற்பட்டதாகும்.

* * *

97) இந்தியாவில் சிறந்த கால் பந்தாட்டக் குழுக் களிடையே தான் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. 1977ம் ஆண்டு கேரளாவில் எர்ணாகுளத்தில் முதல் தேசியப் போட்டி நடத்தப் பெற்ற போது 16 குழுக்கள் பங்கு பெற்றன.

வென்ற குழு-ஐ. டி. ஐ. பெங்களூர்.

தொடர்ந்த குழு-மோகன் பேகன். கல்கத்தா.

இரண்டாவது தேசியப் போட்டி 1978ம் ஆண்டு தமிழ் நாட்டில் உள்ள கோயம்புத்தூர் நகரில் நடை பெற்றது 20 குழுக்கள் பங்கு பெற்றன.

வென்ற குழு - மோகன் பேகன், ஈஸ்ட்பெங்கால் எனும் இரு குழுக்களும் வெற்றி தோல்வியின்றி விளையாடியதால், பரிசுக் கோப்பையை இரண்டுமாகப் பெற்றுக் கொண்டன.

மூன்றாவது தேசியப் போட்டி 1979ம் ஆண்டு அஸ்ஸாமில் உள்ள கௌகாத்தி நகரில் நடை பெற்றது. 16 குழுக்கள் பங்கு பெற்றன,

வென்ற குழு தேசிய எல்லைப் படைக்குழு

தொடர்ந்த குழு மபத்லால் மில்ஸ் பம்பாய்.

நான்காவது தேசியப் போட்டி 1980ம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் கல்கத்தாவில் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. 16 குழுக்கள் பங்கு பெற்றன.

இதில் மோகன் பேகனும் ஈஸ்ட் பெங்கால் குழு இரண்டும் வெற்றித் தோல்வியில்லாத இரட்டை வெற்றிக் குழுவாயின.

ஐந்தாவது தேசியப் போட்டி தமிழ்நாட்டில், சென்னையில் 1981ம் ஆண்டு நடத்தப் பெற்றது. இருபது குழுக்கள் பங்கு பெற்றன.

வென்ற குழு : மோகன் பேகன்.

தொடர்ந்த குழு : மொகமடன் ஸ்போர்ட்ஸ்.

98) கிரிக்கெட் ஆட்டத்தில் வெள்ளைசட்டை அணிந்து ஆடுகின்ற பழக்கம் 19ம் நூற்றாண்டின் கடைசியில் தான் ஆரம்பித்திருக்கிறது. ஆனால் வெள்ளைக் காலணி அணிந் தாடும் பழக்கம் 1880ம் ஆண்டிலிருந்தே தொடங்கிவிட்டது.

99) முதன் முதலாக பெண்கள் ஒலிம்பிக் பந்தயங்களில் பங்கு பெற்ற ஆண்டு 1904. அமெரிக்காவில் உள்ள செயின்ட் லூயிஸ் என்னும் இடத்தில் நடை பெற்றது. அதில் முதன் முதலாகத் தங்கப்பதக்கம் பெற்ற பெண்மணி அமெரிக்காவைச் சேர்ந்த திருமதி M. கௌவல் என்பவ ராகும். அவர் வில்வித்தையில் அம்பு விடும் போட்டியில் முதலாவதாக வந்து, வீராங்கனை என்ற பட்டத்தையும் பெற்றார்.

* * *

100) பெண்கள் தனித்திறன் போட்டிகளில் பங்கெடுத்துக்கொண்ட ஆண்டு 1928. ஆம்ஸ்டர்டாம் நகரில் நடை பெற்ற ஒலிம்பிக் பந்தயங்களில் தான் அவர்கள் முதன் முதலாகப் பங்கு பெற்றனர்.

இந்திய வீராங்கனைகள் ஒலிம்பிக் பந்தயங்களில் முதன் முதலாகப் பங்கு கொண்ட ஆண்டு 1952. ஹெல்சிங்கி பானுமிடத்தில் பந்தயங்கள் நடை பெற்ற போது அவர்கள் பங்கு கொண்டார்கள்.

* * *

101) பெண்களுக்கான நீச்சல் போட்டிகள் ஒலிம்பிக் பந்தயங்களில் முதன் முதலாக சேர்க்கப்பட்ட ஆண்டு 1912 ஆகும்.

* * *

102) இந்திய கூடைப்பந்தாட்டக் கழகம்(BFI) 1950ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

103) ஒரு கூடைப்பந்தாட்டப் போட்டியில், அதிகமான கூடைவை வளையத்திற்குள் பந்தினை எறிந்து, அதிக வெற்றி எண்கள் எடுத்தவர் என்ற புகழைப் பெற்றிருப்பவர் வில்ட் சேம்பர்லின் என்பவர், எறிந்த ஆண்டு 1962, அவர் அடைந்த வெற்றி எண்கள் 100.

* * *

104) இந்தியா ஒலிம்பிக் பந்தயங்களில், குத்துச் சண்டைப் போட்டியில் முதன் முதலாகப் பங்கு பெற்ற ஆண்டு 1948, லண்டனில் நடைபெற்ற பந்தயங்களின் போது தான் அவர்கள் பங்கு பெற்றார்கள்.

* * *

105) பாய்காட் டெஸ்ட் ஆட்டங்களில் உலகிலேயே மிக அதிகபட்சமான ரன்களை எடுத்தவர் என்ற தனிப் பெருமையைப் பெற்றுள்ளார்.

* * *

106) ஓட்டத்தைப் பற்றி முதன் முதலாக ஒரு புத்தகம் இங்கிலாந்து நாட்டில் வெளியானது. வெளியான ஆண்டு 1855.

* * *

107) முதன் முதலாக கூர் ஆணிகள் பதித்த ஓட்டக் காலணிகள் (Spikes) அமெரிக்காவில் நியூயார்க் நகரில் நடந்த ஓட்டப் போட்டிகளில் 1868ம் ஆண்டு பயன்படுத்தப் பட்டது. அதை காலில் அணிந்து கொண்டு முதன் முதலாக ஓடியவர் WM. B. கர்டிஸ் (WM. B. Curtis) என்பவர்.

108) உதைத்தெழுந்து ஓட உதவும் கட்டைகள் (Starting Blocks) முதன் முதலாக 1929ம் ஆண்டுதான் பயன்படுத்தப்பட்டன. அதை முதன்முதலாகப் பயன்படுத்தி முடிவவர் என்ற புகழைப் பெற்றிருப்பவர் **ஜார்ஜ் சிம்சன்** என்பவர்.

இவர் 100 கெஜ ஓட்டத்தை 9.4 வினாடிகளில் ஓடி முடித்த சாதனை நேரத்தை உதைத்தெழுந்து ஓட உதவும் கட்டைகளைப் பயன்படுத்தி ஓடினார் என்பதற்காக, அதிகாரிகள் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள்.

❋ ❋ ❋

109) ஆரம்ப நாட்களில் ஓடுவதற்கு முன்னதாக, வாங்கள் நின்று ஓடக்கிளம்பும் இடங்களில், சிறு சிறு குழி களைத் தோண்டி, அதில் கால்களைப் பதித்து உதைத்து வேகமாக ஓட முயன்றார்கள். அந்தக் குழிகள் ஓட்டக்காரர் களின் உயரம், உடல் அமைப்புக்கு ஏற்ப ஆழமாகவும், அகல மாகவும் இருந்தன.

❋ ❋ ❋

110) கோலூன்றித் தாண்டும் போட்டிக்கான கோல் (Pole)-இன்றும் நாம் மூங்கிலையே பயன்படுத்திக் கொண்டி ருக்கிறோம். கண்ணாடி நாரிழையால் ஆன (Fibre glass Pole) தாண்ட உதவும் கோலை 1950 ஆண்டிலிருந்தே வெளி நாட்டினர் பயன்படுத்திக் கொண்டு வருகின்றார்கள். இது போல் நம்நாட்டில் எத்தனை 'கோல்கள்' இருக்கின்றன என்றால் எண்ணிவிடலாம் என்கிறார்கள். ஒரு சிலர் எண்ணு வதற்கே இடமில்லை, இருந்தால்தானே எண்ணுவதற்கு என் கிறார்கள். அதன் விலை பத்தாயிரம் ரூபாய்க்குமேலாம்— யாரால் வாங்க முடியும் ?

அத்தகைய விலை உயர்ந்த கோலை, தாண்டும் போட்டியில் முதன் முதலாகப் பயன்படுத்தி 15 அடி 5 அங்குலம் உயரம் தாண்டியவர் ஆப்ரே டோலி (Aubrey Dolley) என்பவர். ஆரம்ப நாட்களில் இந்த கோலை பயன்படுத்துவதற்கும் எதிர்ப்பு இருந்திருக்கிறது.

* * *

111) உண்மையான உழைப்பே உயர்வு தரும் என்பார்கள். அதிலும் மனம் லயித்து. இலட்சியத்தை நினைவில் வைத்து, கடினமாக உழைப்பவர்கள், உலகம் புகழும் வீரர்களாக ஆவார்கள் என்ற வரலாற்று உண்மைக்கு வடிவம் கொடுத்திருப்பவர்கள் இரண்டு பேர்.

ஒருவர் ஓபிரியன் (O'Brien) என்பவர். இரும்புக்குண்டு எறிவதில் 60 அடிக்கு மேல் முதலில் எறிந்து உலக சாதனை செய்தவர். இரும்புக்குண்டை அவர் தன்னுடைய முயற்சியிலே திளைத்துத் திளைத்து, எறிந்த முறையில் புதுமை புகுத்தியதால். அவர் எறிந்த முறைக்கு 'ஓபிரியன் முறை' என்றே பெயர் அமைந்து விட்டது.

அதுபோலவே டிக்பாஸ்பரி என்பவர், உயரத் தாண்டும் முறையிலே புதுமையைப் புகுத்தினல். அவர் உயரத் தாண்டலில் உலக சாதனையும் ஒலிம்பிக் சாதனையும் நிகழ்த்தியதால். அவர் தாண்டிய முறைக்கு பாஸ்பரி முறை (Fas Bury) என்றே பெயர் வந்து விட்டது.

இவர்களின் புகழ் இந்த விளையாட்டுப் போட்டிகள் உள்ளவும் நிலைத்து நிற்கும்.

* * *

112) உயரத் தாண்டும்பொழுது-எத்தனை நிமிடம் நாம் அந்தரத்தில் இருக்க முடியும்? பூமியின் ஆர்க்ஷண சக்தி சொல்லாதது மட்டுமல்ல, வலிமை மிக்கதும் கூட!

ஒருவர் 8 அடி 7 அங்குல உயரம் தாண்டுகின்றார் என்றால், அவர் அந்தரத்தில் நிற்கக்கூடிய நேரம் எவ்வளவு தெரியுமா ? 0.98 வினாடிகள் தான்.

காலை உதைத்து மேலே கிளம்பி, கீழே தரையில் குதிக்கும் வரை உள்ள நேரம் அவ்வளவுதான்.

அதுபோலவே நீளத் தாண்டும் போட்டியில் 25 அடி 5 அங்குல தூரம் நீளமாக தாண்டும் ஒருவர், அந்தரத்தில் இருந்து அந்தத் தூரம் போகக்கூடிய நேரமானது 0.85 வினாடிகள் தான். அவ்வளவு நேரம் தான் அந்தரத்தில் இருக்க முடியும்.

* * *

113) ஓடுபவர்களை ஓட விடுவதில் (Start) எத்தனை எத்தனை முறைகள் பின்பற்றப்பட்டிருக்கின்றன தெரியுமா !

1864ம் ஆண்டு நடைபெற்ற ஓட்டப் போட்டிகளில் (அதாவது ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திற்கும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்கும் நடைபெற்ற போட்டியின் போது) ஓட்டக்காரர்களை Go என்று சொல்லித் தான் ஓட விட்டார்கள்

நியூயார்க் நகரில் நடைபெற்ற போட்டிகளில் Go என்று சொல்வதைத் தவிர்த்து விட்டு, Drum சத்தம் எழுப்பி ஓட விட்டனர். சத்தம் பெரிதாக வருகிறது என்பதாலோ என்னவோ, கைக்குட்டையை ஓட்டக்காரர்கள் முன்னே கீழே போட்டு சைகை காட்டி ஓட விட்டார்கள்.

அதையும் மாற்றி, கட்டையைக் கொண்டு தட்டி சத்தம் எழுப்பி, ஓட விட்டார்கள்.

ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னதாகவே, அவர்கள் துப்பாக்கி வெடித்து, ஓட்டக்காரர்களை ஓடவிட்டார்கள்.

இன்றும் நாம் கட்டையை அடித்துக் கொண்டும், கைக்குட்டையை ஆட்டிக் கொண்டும் தான் ஓட விடுகிறோம். நம் இடையே எவ்வளவு முன்னேற்றம் இருக்கிறது பார்த்தீர்களா !

114) கைக்குட்டையை ஆட்டுவதற்கும், துப்பாக்கிச் சுடுவதற்கும் இடையே 1.25 வினாடிகள் நேரம் இருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கின்றார்கள். ஓட்டக்காரர்களுக்கு சாதனைபுரிய எவ்வளவு உதவுகிறது துப்பாக்கிச் சுடும் சத்தம் !

115) நின்று கொண்டே ஓடத் தொடங்கிய பழக்கம் நெடுநாள் வரைக்கும் இருந்து வந்தது. பிறகு குனிந்து அதற்கும் கீழாக நின்று ஓடத் தொடங்கிய பழக்கம் வந்தது.

குனிந்திருந்து ஓடுகின்ற முறை (Crouch Start) என்பதை முதன் முதலில் பழக்கத்தில் கொண்டு வந்து ஓடியவர் சார்லஸ் ஷெரில் என்பவர். [Charles H Sherill]

116) முதன் முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 1951ம் ஆண்டு டெல்லியில் உள்ள நேஷனல் ஸ்டேடியத்தில் நடைபெற்றன. 11 நாடுகள் பங்கேற்றன. 1982ம் ஆண்டு இந்தியாவில் மீண்டும் ஆசியப் போட்டிகள் நடைபெற இருக்கின்றன.

117) கால் பந்தாட்டத்தில் உலக நாடுகளுக்கிடையே நடைபெறும் போட்டியானது உலகக் கோப்பைக்காக [WORLD CUP] போட்டியிடப்படுவதாகும்.

ஒலிம்பிக் பந்தயம் போலவே, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை, முன்னேற ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நிர்ணயிக்கப்படும் ஒரு நாட்டில் நடைபெறுவதாகும்.

உலகக் கோப்பைக்கான போட்டிகள் 1930ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை போட்டி நடைபெற்ற இடம், இறுதிப் போட்டியில் வென்ற நாடுகள், பெற்ற வெற்றி எண்கள் முதலியவற்றை இனி காண்போம்.

(வென்ற நாடு, பெற்ற வெற்றி எண்ணிக்கையை அடுத்த பக்கத்தில் (44-ல்) காண்க.)

❋ ❋ ❋

118) மாரதான் ஓட்டம் என்பது மனோதிடம் உள்ளவர்களாலே தான் ஓடி முடிக்கக்கூடிய ஓட்டமாகும்.

வலிமையான இதயமும், வலிய கால்களும், நெஞ்சுரமும் மன்திறமும் உள்ளவர்களால்தான் ஓடி முடிக்க முடியும் என்றால் அதில் சாதனை புரிபவர்களின் திறமையைப்பற்றி எப்படி புகழ்ந்தாலும் தகும் அல்லவா!

இதோ ஒரு அற்புத ஆற்றல் படைத்த வீரன் அமெரிக்க நாட்டு மாரதான் ஓட்ட வீரன். இத்தனை காலக் காலத்திற்குள் ஓடி வந்து புதிய சாதனை படைப்பேன் என்று சொல்லிச் செய்கின்ற சாதனை படைத்து, சரித்திரம் படைத்த வீரன்.

34 வயது இளைஞன். 1980ம் ஆண்டு ஓடி முடித்த சாதனை நேரம் 2 மணி 9 நிமிடம் 41 விநாடிகள். அதாவது

| ஆண்டு | நடைபெற்ற இடம் | வென்ற நாடு | தொடர்ந்த நாடு | வென்ற எண்ணி |
|---|---|---|---|---|
| 1930 | உருகுவே | உருகுவே | அர்ஜென்டினு | 4—2 |
| 1934 | இத்தாலி | இத்தாலி | செக்கோசுலொவாகியா | 2—1 |
| 1938 | ஜெர்மனி | இத்தாலி | ஹங்கேரி | 4—2 |
| 1950 | பிரேசில் | உருகுவே | பிரேசில் | 2—1 |
| 1954 | ஸ்விட்சர்லாந்து | மேற்கு ஜெர்மனி | ஹங்கேரி | 3—2 |
| 1958 | ஸ்வீடன் | பிரேசில் | ஸ்வீடன் | 5—2 |
| 1962 | சிலி | பிரேசில் | செக்கோசுலொவாகியா | 3—1 |
| 1966 | இங்கிலாந்து | இங்கிலாந்து | மேற்கு ஜெர்மனி | 4—2 |
| 1970 | மெக்சிகோ | பிரேசில் | இத்தாலி | 4—1 |
| 1974 | மியூனிக் | மேற்கு ஜெர்மனி | ஹாலந்து | 2—1 |
| 1978 | அர்ஜென்டினு | அர்ஜென்டினு | ஹாலந்து | 2—1 |

தான் கூறிய நேரத்தில் 19 விநாடிகள் முன்னதாகவே ஓடி முடித்த வீரன்.

1981ம் ஆண்டு, அதேபோல் இன்னும் குறைந்த நேரத்தில் ஓடி வருகிறேன் என்று சவால் விட்டு விட்டு, 2 மணி 8 நிமிடம் 13 விநாடி நேரத்தில் புதிய சாதனை படைத்த அந்த அமெரிக்க வீரனின் பெயர் **ஆல்பர்ட்டோ சலாசர்**

❋ ❋ ❋

119) ஆண்களுக்கு இணையாக பெண்களும் மாரதான் ஓட்டம் ஓட முடியும் என்று பேசுவதுடன் நிற்காமல், பெரும் சாதனை புரிந்த வீராங்கனைகள் பலர். அவர்களிலே தலையாய இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்பவர் **சார்லோ டெஸ்கா** (Charlo Tesca).

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த இந்த வீராங்கனை ஓடி முடித்த நேரம் 2 மணி 29 நிமிடம் 33 விநாடிகள்.

இவர் இதற்கு முன்னர் 2 மணி 25 நிமிடம் 33 விநாடிகளில் ஓடியிருக்கிறார் என்றால், இவரது ஆற்றல்தான் என்ன!

ஆண் ஓட்டக்காரருக்கும் பெண் ஓட்டக்காரருக்கும் இடையில் உள்ள நேரம் 16 நிமிடங்கள்தான் இருக்கின்றன என்றால், பெண்ணின் பேராற்றலைப் பாருங்களேன் ...

❋ ❋ ❋

**120) அகில உலக கூடைப் பந்தாட்டக் கழகம்**

**1932-இல் ஜெனிவா நாட்டில் துவக்கப்பட்டது. இதன் தலைமைச் செயலகம் மியூனிக்கில் உள்ளது. இதன் தலைவர் கொன்சால்ஸ் போயட் II (பிலிப்பைன்ஸ்) இதில் 152 நாடு**

கள் உறுப்பினர்களாக உள்ளது. ஆண்களுக்கான உலக அளவிலான போட்டி 1950ஆம் ஆண்டும் பெண்களுக்கான போட்டி 1957ம் ஆண்டும் தொடங்கப் பெற்றது.

* * *

### 121) அகில உலக கைப்பந்தாட்டக் கழகம்

இக் கழகம் 1947ஆம் ஆண்டு பாரீஸ் நகரத்தில் நகரத்தில் தொடங்கப்பட்டது. இதன் தலைமைச் செயலகம் பாரீஸ் நகரத்திலேயே உள்ளது. இதன் தலைவர் பால்லிபாடு (பிரான்ஸ்) இதில் 135 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளது. ஆண்களுக்கான உலக அளவு போட்டி 1949ஆம் ஆண்டும் தொடங்கப்பட்டது.

* * *

### 122) அகில உலக கால் பந்தாட்டக் கழகம்

இக் கழகம் 1908 ஆம் ஆண்டு பாரீஸ் நகரில் துவக்கப் பட்டது. இக்கழகத்தின் தலைமை செயலகம் சுவிட்சர்லாந்தி லுள்ள சிரிக் என்னும் இடத்தில் உள்ளது. இதன் தலைவர் ஜோவோ ஹேவாலந்த (பிரேசில்) இதில் 150 நாடுகள் உறுப் பினர்களாக உள்ளது. உலக அளவிலான போட்டி 1930ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது.

* * *

### 123) அகில உலக (பொழுது போக்கு) நீச்சல்கழகம்

1908ஆம் ஆண்டு லண்டனில் தொடங்கப் பெற்றது. இதன் தலைமைச் செயலகம் லோவா நகரத்தில் உள்ளது. இதன் தலைவர் ஆண்டி லாம்பாசா (யூகோசுலெவாக்கியா).

97 நாடுகள் உறுப்பினராக உள்ளது. உலக அளவிலான நீர்பந்தாட்டம் 1973ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

ரஷ்ய நீர்பந்தாட்டக் கழகம் 1948ஆம் ஆண்டு முதல் உறுப்பினராக உள்ளது.

❁ ❁ ❁

124) அகில உலக வளைகோல் பந்தாட்டக் கழகம்

இக் கழகம் 1942ஆம் ஆண்டு பாரீஸ் நகரத்தில் தொடங்கப்பட்டது. இதன் தலைமைச் செயலகம் இக்கழகத்தின் தலைவர் ரானே G. பிரேங்கே (பெல்ஜியம்) இதில் 85 நாடுகள் உறுப்பினராக உள்ளது ஆண்களுக்கான உலக அளவு போட்டி. 1971ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

❁ ❁ ❁

125) அகில உலக மேசைப் பந்தாட்டக் கழகம்

1926ஆம் ஆண்டு பெர்லின் என்னுமிடத்தில் தொடங்கப் பெற்றது. இதன் தலைமைச் செயலகம் லண்டனில் உள்ளது. இதன் தலைவர் ராய்வெவன்ஸ் (பிரிட்டன்) உலக அளவிலாக போட்டிகள் 1926ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

❁ ❁ ❁

126) அகில உலக டென்னிஸ் கழகம்

1912 ஆம் ஆண்டு பாரிசில் துவக்கப்பட்டது. இதன் தலைமைச் செயலகம் லண்டனில் உள்ளது. இதன் தலைவர்

பிலிப்பிசட்ரியர் (பிரான்ஸ்) இதில் 103 நாடுகள் உறுப்பினராக உள்ளது. உலக அளவிலான போட்டிகள் இன்னும் நடைபெறவில்லை.

❋ ❋ ❋

127) அர்ச்சுனா விருதும் விவரமும்

சிறந்த விளையாட்டு வீரர்களுக்குத் தேசியவிருதாக அருச்சுனா விருது ஆண்டு தோறும் இந்தியா நாட்டில் வழங்கப்படுகிறது.

வில்வித்தையில் சிறந்தவனான அருச்சுனன் அம்பெய்யும் கோலத்தைக் கொண்ட வெண்கலச் சிலையே இவ்விருதுச் சின்னமாக வீரர்களுக்கு வழங்கப்படுகிறது.

தொடர்ந்து மூன்று ஆண்டுகள் விளையாட்டில் சிறந்து விளங்கும் ஆண், பெண் வீரர்கள் தேசிய விளையாட்டு கழகத்தால் பரிந்துரைக்கப்பட்டு அனைத்திந்திய விளையாட்டு கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் இவ்விருதினைப் பெறும் தகுதியுடையவராகின்றனர்.

1961 ஆம் ஆண்டு முதல் இவ்விருது தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

விருது பெற்ற தமிழ் நாட்டு வீரர்களும் வீராங்கனைகளும்

1961

| | | |
|---|---|---|
| மான்யுவல் ஆரோன் | — | சதுரங்கம் |
| இராமநாதன் கிருஷ்ணன் | — | டென்னிஸ் |
| ஏ. பழனிசாமி | — | கைப்பந்து |

1966

| | | |
|---|---|---|
| வி ஜே. பீட்டர் | — | வளைகோல் பந்து (ஆண்) |

1967

பீட்டர் தங்கராசு [கால்பந்து]

சவரிமுத்து ஜான் காபிரியேல் — பளுத்தூக்குதல்

1970

ஜி. ஜெகநாதன் — மேசைப்பந்தாட்டம்

1971

எஸ். வெங்கட்டராகவன் — கிரிக்கெட்

பி. கிருஷ்ணமூர்த்தி — வளைகோல்பந்தாட்டம்

1972

ஏ. கரீம் — பூப்பந்து

1974

விஜய் அமிர்தராஜ் — டென்னிஸ்

எஸ். வெள்ளியசாமி — பளுத்தூக்குதல்

1975

குமாரி அனுசுயாபாய் — ஓடுகளப்போட்டி

1976

பாலமுருகானந்தம் — பளுத்தூக்குதல்

1977-78

டி. விஜயராகவன் — கூடைப்பந்து

எம். தமிழ்ச்செல்வன் — பளுத்தூக்குதல்

1979

ஏ. கருணாகரன் — பளுத்தூக்குதல்

1980

ஞானசேகரன் — ஓடுகளப்போட்டி

## 1980-81 விருதுகள்

பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள்

| | | |
|---|---|---|
| ஓடுகளம் | — | கோபால்சைனி |
| இறகுப்பந்து | — | சையத் மோதி |
| குத்துச்சண்டை | — | ஐசாக் அமல்தாஸ் |
| சதுரங்கம் | — | ரோகிணி கதிகார் |
| கிரிக்கெட் | — | சி. பி. எஸ். சவாண் |
| | | எஸ். எம். கெச். கிருமாணி |
| கால்பந்து | — | முகமது ஹபீப் |
| வளைகோல்பந்து | — | முகமது சாகித் எல்சா செகசல்ஸ் |
| கபாடி | — | சாந்தாராம் சாதேவ் |
| டென்னிஸ் | — | ரமேஷ் கிருஷ்ணன் |
| மேசைப்பந்து | — | மஞ்ஜித் துவா |
| மல்யுத்தம் | — | கஜ்சாசிங் |

128) 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் உலகக் கால்பந்துக் கோப்பைக்கான போட்டிகள், 1982ம் ஆண்டு, ஸ்பெயின் நாட்டில் உள்ள மாட்ரிட் என்னுமிடத்தில் சிறப்பாக நடைபெற்று முடிந்தன

129) உலக வெற்றி நாடாக இத்தாலி, வெற்றிக் கோப்பையை வென்று புகழ் பெற்றது. இரண்டாவது இடத்தை மேற்கு ஜெர்மனியும்; மூன்றாவது இடத்தை போலந்தும்; நான்காவது இடத்தை பிரான்சும் பெற்று சிறப்படைந்தன.

180) 1958, 1962, 1970ம் ஆண்டுகளில் பிரேசில் 3 முறை இவ்வாறு உலகக் கோப்பையை வென்றது போலவே, இத்தாலியும் மூன்று முறை இந்தக் கோப்பையை வென்றிருக்கிறது.

வென்ற ஆண்டுகள் 1934, 1938, 1982 அதாவது 44 ஆண்டுகள் கழித்து, இந்த வெற்றியை இத்தாலி பெற்றிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

* * *

181) இத்தாலி கால் பந்தாட்டக் குழுவின் தலைவனின் பெயர் டினோ ஜாப் என்பதாகும். இதில் குறிப்பிடத் தக்க அம்சம் என்னவெனில், இவர் தான் இந்தப் போட்டிகளில் கலந்து கொண்ட வீரர்களிலே அதிகமான வயதுடையவராவார். இவரது வயது 40 ஆகும்.

* * *

182) இத்தாலி தேசத்தின் அதிபர் சாண்ட்ரோ பெர்ட்டினி என்பவர் முழுப்போட்டியையும் கண்டு ரசித்தார். ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, தன்னை மறந்து துள்ளியும், குதித்தும் ஆர்வத்துடன் பார்த்துப் பாராட்டினார். அவரது வயது என்ன தெரியுமா? வயது 86 தான்!

* * *

183) உலகக் கால் பந்துக் கோப்பைக்கான போட்டிகளில் 24 நாடுகள் போட்டியிட்டன. அவர்களில் 4 ஆட்டக்காரர்கள், உலகிலேயே சிறந்த ஆட்டக்காரர்கள் என்று

தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றார்கள். அவர்களைத் தேர்ந்தெடுத்தவர்கள் அனுபவமிக்க உலக விளையாட்டுத்துறை பத்திரிக்கையாளர்கள் ஆவார்கள்

❀ ❀ ❀

134) சிறந்த ஆட்டக்காரர்களும் அவர்கள் பெற்ற மதிப்பெண்களும் பின்வருமாறு :-

| | பெயர் | நாடு | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 1. | பாவ்லோரோசி | இத்தாலி | 437 |
| 2. | ராபர்டோ பால்கோ | பிரேசில் | 252 |
| 3. | காரஸ்ஹிஸ் ரம்மீனகி | மே, ஜெர்மனி | 207 |
| 4. | போனிக் | போலந்து | 179 |

❀ ❀ ❀

135) உலகக் கால்பந்தாட்டக் கோப்பைக்கான போட்டிகளில் மொத்தம் 52 போட்டிகள் (Matches) நடந்தன. அப்பொழுது 146 கோல்கள் போடப்பட்டிருக்கின்றன. அதாவது ஒரு ஆட்டத்தில் விழுந்த சராசரி கோல்கள் 2. 8 ஆகும். இது 1982ம் ஆண்டு நடந்த போட்டிகளில் நிகழ்ந்ததாகும்.

❀ ❀ ❀

136) 1978ம் ஆண்டு நடந்த போட்டிகளின் போது ஒரு ஆட்டத்தில் விழுந்த சராசரி கோல்களின் எண்ணிக்கை 2.6 ஆகும்.

❀ ❀ ❀

137) 1974ம் ஆண்டுக்கான சராசரி கோல்களின் எண்ணிக்கை தான் சாதனை பொறித்ததாகும். அதாவது 5, 8 என்பதே அதன் கணக்காகும்.

138) மாட்ரிட்டில் நடந்த போட்டிகளிலே, அதிகமான எண்ணிக்கையில் கோல்கள் போட்டவர் இத்தாலியைச் சேர்ந்த வீரர் பாவ்லோ ரோசி ஆவார். அவர் போட்ட கோல்களின் எண்ணிக்கை 6 ஆகும்.

✱ ✱ ✱

139) பாவ்லோ ரோசிக்கு சிறந்த வீரர் என்ற பட்டத்துடன், 4000 ஷில்லிங் மதிப்புள்ள தங்கப் பந்துக் கோப்பையும் (GOLDEN BALL TROPHY); 3700 ஷில்லிங் மதிப்புள்ள தங்கக் காலணிக் கோப்பையும் (GOLDEN SHOE TROPHY) பரிசாகப் பெற்றார்.

✱ ✱ ✱

140) அதிகமான கோல்கள் போட்டு சிறப்பு பெற்ற நாடு பிரேசில் ஆகும்.

✱ ✱ ✱

141) ஒரே போட்டியில் அதிகமான கோல்கள் போட்டது என்ற புகழையும் சாதனையும் செய்த நாடு ஹங்கேரி ஆகும். அந்த நாடு எல்சல்வேடார் என்ற நாட்டுக்குழுவுடன் விளையாடிய போது 10 கோல்கள் போட்டிருக்கிறது.

✱ ✱ ✱

142) சிறந்த இலக்குக் காவலர் என்ற புகழ்பெற்றவர் பீட்டர் ஷிட்டன் என்பவர். இங்கிலாந்து அணியைச் சேர்ந்த வீரர். இவர் தொடர்ந்து 426 நிமிடங்கள் ஆடிய ஆட்டங்

களின் போது. இவர் ஒருமுறை கூடதான் காத்து நின்று இலக்கினுள் பந்து போய் விடாமல் சிறப்பாக ஆடினார் என்று புகழ் பெற்றார்.

❋ ❋ ❋

143) இந்த போட்டிகளில் தவறாக ஆடினார்கள் என்பதற்காக ஐந்து வீரர்கள் ஆட்டத்தை விட்டே வெளியேற்றப் பட்டனர். 1. ஜான் விசேக் (செக்கோசுலேவோகியா); 2. தியோகோமாடானு (அர்ஜென்டினா); 3. அமெரிக்கோ காலிகோ (அர்ஜென்டினா); 4. கில்பர்டேர் கயர்உட் (ஹோண்டுராஸ்); 5. மால்டோனகி (வட அயர்லாந்து)

❋ ❋ ❋

144) ஐந்துமுறை விம்பிள்டன் ஒற்றையர் போட்டியில் வெற்றிபெற்று சாதனை புரிந்த வீரன், ஸ்வீடன் தேசத்தைச் சேர்ந்த ஜோன்பர்க் என்பவன்;

பெரிய சாதனை புரிந்த இந்த வீரனால் ஒரு முறை கூட ஜெயிக்க முடியாத ஒரு போட்டியும் இருந்தது. அது தான் அமெரிக்க நாட்டில் ஆண்டு தோறும் நடைபெறும் டென்னிஸ் போட்டியாகும்.

இந்தப் போட்டியில் நான்கு முறை இறுதிப் போட்டியில் போராடித் தோற்ற வரலாறு போர்க்கு உண்டு.

அந்த பத்தாண்டு கால வரலாற்று நிகழ்ச்சியையும் வென்ற வீரர்களின் பட்டியலையும் இங்கு பார்ப்போம்.

| | ஆண்டு | வென்றவர் | தொடர்ந்தவர் |
|---|---|---|---|
| 1. | 1972 | இலிநாஸ்டேசி | ஆர்தர் ஆஷ் |
| 2. | 1973 | ஜான் நியூகோம்ப் | ஜேன்கோட்ஸ் |

| | | | |
|---|---|---|---|
| 3. | 1974 | ஜிம்மி கானர்ஸ் | கென் ரோஸ்வால் |
| 4. | 1975 | மானுவன் ஓரன்டிஸ் | ஜிம்மி கானர்ஸ் |
| 5. | 1976 | ஜிம்மி கானர்ஸ் | ஜோன் போர்க் |
| 6. | 1977 | கிளர் மோ விலாஸ் | ஜிம்மி கானர்ஸ் |
| 7. | 1978 | ஜிம்மி கானர்ஸ் | ஜோன் போர்க் |
| 8. | 1979 | ஜான் மெக்கன்ரோ | விலாஸ் ஜெநலேய்ட்ஸ் |
| 9. | 1980 | ஜான் மெக்கன்ரோ | ஜோன் போர்க் |
| 10. | 1981 | ஜான் மெக்கன்ரோ | ஜோன் போர்க் |

145) 1976 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்களில், வெற்றி பெற்ற நாடுகளிலிருந்து வரிசைப் படுத்தப்பட்டிருக்கின்றன.

**கால் பந்தாட்டம்**

1. கிழக்கு ஜெர்மனி, 2. போலந்து, 3. ருஷ்யா, 4. பிரேசில், 5 ஹங்கேரி, 6. ஜப்பான்.

**கைப் பந்தாட்டம்**

1. போலாந்து, 2. ருஷ்யா, 3. க்யூபா, 4. ஜப்பான் 5. செக்கோசுலேவோகியா, 6. தென் கொரியா.

**கூடைப் பந்தாட்டம்**

1. அமெரிக்கா, 2. யூகோசுலேவியா, 3. ருஷ்யா. 4. கனடா, 5. இத்தாலி, 6. செக்கோசுலேவோகியா.

**வளைகோல் பந்தாட்டம்**

1. நியூசிலாந்து, 2. ஆஸ்திரேலியா, 3. பாகிஸ்தான் 4. ஹாலந்து, 5. மேற்கு ஜெர்மனி, 6. ஸ்பெயின்

1976 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் இந்தியா ஏழாவது இடத்தைப் பெற்றிருக்கிறது.

* * *

148) 1980 ஆம் ஆண்டில் மாஸ்கோ ஒலிம்பிக்பந்தயங்களில் வெற்றி பெற்று உலகத்திலே சிறந்த நாடுகள் என்று புகழ் பெற்றவை.

**கால் பந்தாட்டம்**

1. செக்கோசுலெவோகியா, 2. கிழக்கு ஜெர்மனி, 3. சோவியத் யூனியன், யூகோசுலேவியா,

**கூடைப் பந்தாட்டம்**

**ஆண்கள் பிரிவு**

1. யூகோசுலேவியா, 2. இத்தாலி, 3. சோவியத் யூனியன், 4. ஸ்பெயின்.

**பெண்கள் பிரிவு**

1. சோவியத் யூனியன், 2. பல்கேரியா, 3. யூகோஸ்லேவியா, 4. ஹங்கேரி.

**கைப்பந்தாட்டம்**

**ஆண்கள் பிரிவு**

1. சோவியத் யூனியன், 2. பல்கேரியா, 3. ருமேனியா, 4. போலந்து.

**பெண்கள் பிரிவு**

1. சோவியத் யூனியன், 2. கிழக்கு ஜெர்மனி, 3. பல்கேரியா.

**வளைகோல் பந்தாட்டம்**

**ஆண்கள் பிரிவு**

1. இந்தியா, 2. ஸ்பெயின், 3. சோவியத் யூனியன், 4. போலந்து

**பெண்கள் பிரிவு**

1. ஜிம்பாவே, 2 செக்கோசுலேவாகியா, 3. சோவியத் யூனியன், 4. இந்தியா

மாஸ்கோ ஒலிம்பிக் பந்தயங்களில் அதிகமாக வெற்றிப் பதக்கங்கள் பெற்று முன்னணியில் நின்ற முதல் நான்கு நாடுகள்.

| நாடு | மொத்தப் பதக்கங்கள் |
|---|---|
| சோவியத் யூனியன் | 196 |
| கிழக்கு ஜெர்மனி | 126 |
| பல்கேரியா | 40 |
| ஹங்கேரி | 32 |
| இந்தியா | 1 |

147) கிரிக்கெட் பந்தாட்டம்

ஒலிம்பிக் பந்தயங்களில் கிரிக்கெட் ஆட்டம் இடம் பெற வில்லை. என்றாலும் உலகத்திலேயே மிகவும் விரும்பப் படுகின்ற ஆட்டமாக கிரிக்கெட்டும், டென்னிசும் மேசைப் பந்தாட்டமும் (Table Tennis) இருந்து வருகின்றன.

1. மேற்கிந்தியத் தீவினர், 2. ஆஸ்திரேலியா 3. இங்கிலாந்து, 4. இந்தியா, 5. பாகிஸ்தான்,

6. நியூசிலாந்து ஆகிய ஆறு நாடுகளும் முதன்மையான நாடுகளாகும்.

❀ ❀ ❀

## 148) டென்னிஸ் ஆட்டம்

1. ஆஸ்திரேலியா, 2. அமெரிக்கா, 3. இங்கிலாந்து, 4. இந்தியா, 5. ஸ்வீடன், 6. ரஷ்யா.

ஒலிம்பிக் பந்தயங்களில் டென்னிஸ் இடம் பெறவில்லை. ஆனால் டென்னிஸ் ஆட்டத்திற்கு விம்பிள்டன் என்ற இடத்தில் நடைபெறும். போட்டியானது உலகப் புகழ் பெற்றதாகும்.

❀ ❀ ❀

## 149) இந்தியாவும் வளைகோல் பந்தாட்டமும்

1908ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வளைகோல் பந்தாட்டம் சேர்க்கப்பட்டது. இந்தியா 1928ஆம் ஆண்டு தான் முதன் முதலாக ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொண்டது.

1928, 1932, 1936, 1948, 1952, 1956ம் ஆண்டு களில் நடந்த பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில், இந்தியா வெற்றி பெற்று தங்கப்பதக்கம் பெற்றது.

1960 ஆம் ஆண்டு பாகிஸ்தானிடம் இந்தியா தோற்றது.

1964ல் இந்தியா மீண்டும் பாகிஸ்தானை வென்று தங்கப்பதக்கம் பெற்றது.

1968லும் 1972லும் இந்தியா தோற்று மூன்றாவது இடத்திற்கு வந்தது. அதற்குரிய வெண்கலப் பதக்கத்தைப் பெற்றது.

1975 ஆம் ஆண்டுக்கான உலக வளைகோல் பந்தாட்டப் போட்டியில் இந்தியா வென்று, தங்கப் பதக்கத்தைப் பெற்று, இழந்த புகழை மீட்டுக் கொண்டது.

ஆனால் 1976 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் இந்தியா 7வது இடத்தைத்தான் பெற்றிருந்தது. 1978 ஆம் ஆண்டு நடந்த ஆசியப் போட்டியிலும் இந்தியா வெள்ளிப் பதக்கத்தை பெற்றது. ஆனால், உலகப் போட்டியில் 7வது இடத்தையே மீண்டும் பெற்றது. தற்போது உலக அளவில் இந்தியா 6ஆம் இடத்தை அடைந்திருந்தது. இப்போது, 1980ஆம் ஆண்டில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் பெற்று முதன்மை இடத்தை அடைந்திருக்கிறது.

1982ஆம் ஆண்டு நடந்த ஆசியப் போட்டியில் இந்தியா பாகிஸ்தானிடம் தோற்றது.

❋ ❋ ❋

## 150. ஒலிம்பிக்—சில குறிப்புகள்

1. ஒலிம்பிக் பந்தயத்தின் குறிக்கோள் விரைக (Faster) உயர்க (Higher) வன்மை பெறுக (Stronger) என்பதாகும்.

2. ஒலிம்பிக் பந்தயத்தில் மிகக் குறைந்த தூர ஓட்டம் 100 மீட்டர் தூரமாகும். மிக நீண்ட தூர ஓட்டம் மாரதான் ஓட்டம் என்று அழைக்கப்படும். அதன் தூரமானது 26 மைல் 385 கெஜமாகும்.

3. புதிய ஒலிம்பிக் பந்தயம் 1896 ஆம் ஆண்டு கிரேக்க நாட்டில் உள்ள ஏதென்ஸ் என்னுமிடத்தில் நடந்

தது. இதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் பியரி கூபர்ட்டின் பிரபு என்பவராவார்.

4. 1976ஆம்ஆண்டு கனடா நாட்டிலுள்ள மாண்ட்ரியல் எனும் நகரில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்றன. இது 21வது ஒலிம்பிக் பந்தயமாகும். 1980 ஆம் ஆண்டு ரஷ்யாவில் உள்ள மாஸ்கோ நகரில் நடைபெற்றன.

5. 1928ஆம் ஆண்டு தான் பெண்களுக்கான போட்டி நிகழ்ச்சிகள் ஒலிம்பிக் பந்தயத்தில் சேர்க்கப்பட்டன.

6. 1976ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் அதிகமான தங்கப்பதக்கங்கள், வெள்ளிப் பதக்கங்கள், வெண்கலப்பதக்கங்கள் வாங்கிய நாடுகள் 1 ரஷ்யா 2. கிழக்கு ஜெர்மனி, 3. அமெரிக்கா.

7. ஒலிம்பிக் பந்தயக்கழகத்தின் தலைவர் அந்தோணியோ சமாரஞ்ச்.

151) உலகில் சிறந்த விளையாட்டு வீரர்கள்

இந்திய நாட்டின் சிறந்த டென்னிஸ் ஆட்டக்காரர்கள் ராமநாதன் கிருஷ்ணன்; விஜய் அமிர்தராஜ், ஆனந்த் அமிர்தராஜ், ரமேஷ்கிருஷ்ணன்.

உலகில் சிறந்த ஹாக்கி பந்தாட்டக்காரர் என்று பெயர் பெற்ற இந்தியர் மேஜர் தியான்சந்த்.

உலகில் சிறந்த கால் பந்தாட்ட வீரர் என்று புகழப் பட்டவர் பிரேசில் நாட்டவரான பீலி என்பவர்.

கிரிக்கெட் ஆட்டத்தில் உலகப் புகழ் பெற்ற ஆட்டக் காரர்கள்-ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டான் பிராட்மென்

மேற்கிந்தியத் தீவைச் சேர்ந்த கேரி சோபர்ஸ் இந்தியாவைச் சேர்ந்த ரஞ்சித்சிங்ஜி; சி. கே. நாயுடு, கவாஸ்கர் வெங்கடராகவன்.

டென்னிஸ் ஆட்டத்தில் சிறந்த உலக ஆட்டக்காரர்கள் ஜான்மெக்கன்ரோ, பிஜோன்பர்க், ஜிம்மிகானர்ஸ் ஆர்தர் ஆஷ், ராட்லேவர், ஜான் நியூகோம்ப்.

டென்னிஸ் ஆட்டத்தில் சிறந்த பெண்கள் கிரீஸ் எவர்ட் பில்லிஜீன்கிங், இவான் கூலகாங்

152) கைப் பந்தாட்டத்தைக் கண்டு பிடித்தவர் வில்லியம் மோர்கன் எனும் அமெரிக்கர், கண்டுபிடித்த ஆண்டு 1895.

153) கூடைப் பந்தாட்டத்தைக் கண்டுபிடித்தவர் டாக்டர் ஜேம்ஸ் நெய்ஸ்மித் என்னும் அமெரிக்கர். கண்டு பிடித்த ஆண்டு 1891.

154) டென்னிஸ் பந்தாட்டத்தைக் கண்டு பிடித்தவர் வால்டர் கிளாப்டன் விங்பீல்டு என்பவர்.

155) ஜூடோ விளையாட்டைக் கண்டு பிடித்தவர் டாக்டர் ஜிஜாரோகானோ என்பவர்.

156) தளப் பந்தாட்டத்தைக் கண்டுபிடித்தவர் ஏப்னர் டபுள்டே என்பவர்.

157) மென் பந்தாட்டத்தை (Soft Ball) முதன் முதலில் உருவாக்கியவர் ஜார்ஜ் ஹேன்காக் (George Hancock) என்ற அமெரிக்கர்.

158) வலைப்பந்தாட்டத்தை முதன்முதலாக ஆடிக் காட்டி வழிகாட்டியவர் டாக்டர் டோலஸ் (Dr. Toles) எனும் அமெரிக்கப் பெண்மணி. அவர் 1895 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டிலுள்ள ஒஸ்டர்பர்க் உடற் கல்விக் கல்லூரியில் முதன் முதலாக ஆடினார்.

159) ரக்பி எனும் ஆட்டத்தின் தொடக்கத்திற்குக் காரணமாய் அமைந்தவர் வில்லியம் வெப் எல்லீஸ் எனும் இங்கிலாந்துக்காரர் ஆவார். ரக்பி ஆட்டம் பிறந்த ஆண்டு 1895 என்று சரித்திர ஆசிரியர்கள் கருதுகின்றார்கள்.

160) எறி பந்தாட்டம் (Throw Ball) என்ற ஆட்டத்தைக் கண்டு பிடித்து உருவாக்கியவர் சென்னை ஒய் எம் சி ஏ கல்லூரியில் பணியாற்றிய திருமதி பக் (Mrs Buck) ஆவார்.

## (161) ஒலிம்பிக் கொடி

ஒலிம்பிக் கொடி வெள்ளை நிறம் உடையது. அதில் 5 வண்ண வளையங்கள் உண்டு.

ஒவ்வொரு வளையமும் ஒவ்வொரு நிறம் உடையது. அவை கறுப்பு, மஞ்சள், நீலம், பச்சை, சிவப்பு என்பனவாகும்.

5 வளையங்களும் 5 கண்டங்களைக் குறிப்பனவாக அமைந்திருக்கின்றன.

நீல நிறம் ஐரோப்பாவையும், மஞ்சள் நிறம் ஆசியாவையும், கறுப்பு நிறம் ஆப்பிரிக்காவையும், பச்சை நிறம் அமெரிக்காவையும், சிவப்பு நிறம் ஆஸ்திரேலியாவையும் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன.

உலக மக்கள் அனைவரும் விளையாட்டுப் பெருந் தன்மை உடையவர்களாகவும், நாடு, இனம், மதம் என்ற வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டு விளங்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் வண்ண வளையங்கள் ஒன்றோடு ஒன்று இணைத்து உருவாக்கப்பட்டிருக்கின்றன.

❋ ❋ ❋

## (162) விளையாட்டு வீரர்களின் நல்ல குணங்கள்

1. நல்ல விளையாட்டு வீரர்கள் விளையாட்டை விளையாட்டுக்காகவே விளையாடுகின்றார்கள்.

2. அவர்கள் வெற்றி கொள்ளும் போது வெறி கொள்ளாமலும், தோல்வி காணும் போது துவண்டு போகாமலும் சரிசமமாகப் பாவித்து, இரண்டையும் அமைதியாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆட்ட நேரத்தின் போது தரப்படுகின்ற எந்த விதமான முடிவையும் உயர்ந்த பண்பாட்டுடன் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

அவர்கள் சுயநலம் இல்லாதவர்களாக, பிறருக்கு எந்த நேரத்திலும் உதவத் தயாராக இருக்கின்றவர்களாக உலா வருகின்றார்கள்.

நடுவர் கூறுகின்ற எந்த முடிவைக் குறித்தும் விவாதிக்காமல், குறுக்கீடு இல்லாமல் மனமார ஏற்று மகிழ்ச்சியடைகின்றார்கள்.

❁ ❁ ❁

## 163) விளையாட்டின் நோக்கம்

வெற்றி பெறுவதுமட்டுமே விளையாட்டின் நோக்கமல்ல. விவேகத்துடனும ஆர்வத்துடனும் பங்கு பெறுவதும் தான், நன்றாகப் போட்டியிடுவது தான் மிக மிக முக்கியமாகும்.

"ஒருவர் விளையாட்டுப் போட்டியில் பங்கு பெற்று விளையாடியதை எழுத வருகின்ற சரித்திர ஆசிரியர் ஒருவர், அவர் வென்றாரா தோற்றாரா என்று எழுதவில்லை. அவர் எவ்வாறு விளையாடினார், எந்த முறையில் நடந்து கொண்டார், என்று அவர் இனிய நடை முறையைத் தான் எழுதுவார்" என்கிறார் கிட்ளிங் என்பவர்.

ஆகவே, நல்ல நினைவுகளுடன் நல்ல குணங்களையும் பண்பாடுகளையும், ஒழுக்கமான பழக்க வழக்கங்களையும் பெறுவதற்காகவே நாம் விளையாட வேண்டும் என்ற உணர்வுடன் நாம் விளையாட்டுக்களில் பங்கு பெறவேண்டும்.

### 184) உயரம் எவ்வளவு ?

கூடைப் பந்தாட்டத்தில் உள்ள வளையத்தின் உயரம் 10 அடியாகும்.

வலைப்பந்தாட்டத்தில் (Net Ball) உள்ள வளையத்தின் உயரம் 10 அடியாகும்.

ஆண்கள் ஆடும் கைப்பந்தாட்டத்தில் வலையின் உயரம் 7 அடி $11\frac{5}{8}$ அங்குலமாகும்.

பெண்களுக்கான கைப்பந்தாட்டத்தில் வலையின் உயரம் 7 அடி 4 அங்குலமாகும்.

பூப்பந்தாட்டத்தில் உள்ள வலையின் உயரம் 5 அடியாகும்.

வளையப் பந்தாட்டத்தில் உள்ள வலையின் உயரம் 6 அடியாகும்.

மேசைப் பந்தாட்டத்தில் உள்ள வலையின் உயரம் 6 அங்குலமாகும்.

டென்னிஸ் ஆட்டத்தில் உள்ள வலையின் உயரம் 3 அடியாகும்.

கால் பந்தாட்டத்தில் உள்ள இலக்கின் (Goal) உயரம் 8 அடியாகும்.

வளைகோல் பந்தாட்டத்தில் உள்ள இலக்கின் உயரம் 7 அடியாகும்.

### 185) ஆட்டமும் ஆட்டக்காரர்களும்

1) கால் பந்தாட்டம் —11 ஆட்டக்காரர்கள்
2) வளைகோல் பந்தாட்டம் —11 ஆட்டக்காரர்கள்
3) கிரிக்கெட் ஆட்டம் —11 ஆட்டக்காரர்கள்

4) மென் பந்தாட்டம் — 9 ஆட்டக்காரர்கள்
5) கோகோ ஆட்டம் — 9 ஆட்டக்காரர்கள்
6) எறி பந்தாட்டம் — 9 ஆட்டக்காரர்கள்
7) சடுகுடு ஆட்டம் — 7 ஆட்டக்காரர்கள்
8) வளையப் பந்தாட்டம் — 2 ஆட்டக்காரர்கள்
9) கைப் பந்தாட்டம் — 6 ஆட்டக்காரர்கள்
10) கூடைப் பந்தாட்டம் — 5 ஆட்டக்காரர்கள்
11) பூப்பந்தாட்டம் — 5 ஆட்டக்காரர்கள்

166) ஐந்தும் பத்தும்

தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் (Event) போட்டியிட்டு ஒருவர் வென்றால், வெற்றி வீரர் அல்லது வீராங்கனை (Champion) என்ற விருதினைப் பெறுவார் என்பதை நாம் அறிவோம்.

இதைவிட ஒருவர் ஐந்து போட்டி நிகழ்ச்சிகளிலும் பத்துப் போட்டி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டும், வெற்றி பெறலாம். அத்தகைய நிகழ்ச்சிகள் பின் வருமாறு.

167) ஐந்து போட்டி நிகழ்ச்சிகள் (Pentathlon)

1 நீளத்தாண்டுதல்
2 வேலெறிதல்
3 தட்டெறிதல்
4 200 மீட்டர் ஓட்டம்
5 1500 மீட்டர் ஓட்டம்

மேலே கூறிய ஆண்களுக்கான ஐந்து போட்டி நிகழ்ச்சிகளும் ஒரே நாளில் நடத்தி முடிக்கப்படும்.

## 168) பத்துப் போட்டி நிகழ்ச்சிகள் (Decathlon)

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பத்துப் போட்டி நிகழ்ச்சிகளும் இரண்டு நாட்களில் வரிசைக் கிரமமாகவே நடத்தி முடிக்கப்படும்.

**முதல் நாளில் 5 நிகழ்ச்சிகள்**

1 100 மீட்டர் ஓட்டம்
2 நீளத் தாண்டுதல்
3 இரும்புக் குண்டு எறிதல்
4 உயரத் தாண்டுதல்
5 400 மீட்டர் ஓட்டம்

**இரண்டாம் நாள் 5 நிகழ்ச்சிகள்**

1 110 மீட்டர் தடை தாண்டி ஓட்டம்
2 தட்டெறிதல்
3 கோலூன்றித் தாண்டுதல்
4 வேலெறிதல்
5 1500 மீட்டர் ஓட்டம்

பத்துப் போட்டிகளிலும் பங்கு பெற்று அதிக வெற்றி எண்கள் எடுக்கின்றவரே சிறந்த வெற்றி வீரர் என்ற விருதினைப் பெறுகின்றார்.

இதுவரை சிறந்த வீரர் என்று ஒலிம்பிக் பந்தயங்களில் வென்றவர் ரபர்ட் மத்தியாஸ் எனும் அமெரிக்கர். அவர் 17 வயதினர். இரண்டு முறை வெற்றி பெற்றிருக்கிறார்.

## 169) பெண்களுக்கான 5 போட்டி நிகழ்ச்சிகள் (Pentathlon)

முதல் நாள் போட்டிகள்

1 100 மீட்டர் தடை தாண்டி ஓட்டம்
2 இரும்பு குண்டு எறிதல்
3 உயரத் தாண்டுதல்

இரண்டாம் நாள் போட்டிகள்

4 நீளத் தாண்டுதல்
5 200 மீட்டர் ஓட்டம்

பெண்களுக்கான போட்டிகள் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களில் நடத்தி முடிக்கப்படும்.

33 வயதில் இந்தப் போட்டியில் 1972 ஆம் ஆண்டு வென்றவர் மேரி பீட்டர்ஸ் எனும் இங்கிலாந்துப் பெண்மணி ஆவார்.

❋ ❋ ❋

## 170) ஒலிம்பிக் பந்தயம்

1896 ஆம் ஆண்டு புதிய ஒலிம்பிக் பந்தயங்கள் கிரேக்க நாட்டில் நடைபெற்றன. இது வரை 19 ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்றிருக்கின்றன

| வரிசை எண் | நடந்த ஆண்டு | நடந்த இடம் | நடந்த நாடு |
|---|---|---|---|
| 1. | 1896 | ஏதென்ஸ் | கிரேக்கம் |
| 2. | 1900 | பாரிஸ் | பிரான்ஸ் |
| 3. | 1904 | செயின்ட்லூயிஸ் | அமெரிக்கா |
| 4. | 1908 | லண்டன் | இங்கிலாந்து |
| 5. | 1912 | ஸ்டாக்ஹோம் | ஸ்வீடன் |
| 6. | 1920 | ஆன்ட்வெர்ப் | பெல்ஜியம் |
| 7. | 1924 | பாரிஸ் | பிரான்ஸ் |
| 8. | 1928 | ஆம்ஸ்டர்டாம் | ஹாலந்து |
| 9. | 1932 | லாஸ் ஏஞ்சல்ஸ் | அமெரிக்கா |
| 10. | 1936 | பெர்லின் | ஜெர்மனி |
| 11. | 1948 | லண்டன் | இங்கிலாந்து |
| 12. | 1952 | ஹெல்சிங்கி | பின்லாந்து |

| | | | |
|---|---|---|---|
| 13. | 1956 | மெல்போர்ன் | ஆஸ்திரேலியா |
| 14. | 1960 | ரோம் | இத்தாலி |
| 15. | 1964 | டோக்கியோ | ஜப்பான் |
| 16. | 1968 | மெக்சிகோ | அமெரிக்கா |
| 17. | 1972 | மியூனிக் | மே. ஜெர்மனி |
| 18. | 1976 | மான்ட்ரியல் | கனடா |
| 19. | 1980 | மாஸ்கோ | ரஷ்யா |

1916 ஆம் ஆண்டு முதல் உலக மகாயுத்தம் நடந்தது. 1940-44 ஆம் ஆண்டுகளில் இரண்டாம் உலக மகாயுத்தம் நடந்தது. ஆகவே, மூன்று முறை ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெறாமல் நின்று போயின.

❁ ❁ ❁

171) **வெற்றியும் பரிசும்**

ஒலிம்பிக் போட்டிகளில் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் முதலாவதாக வந்தால் தங்கப் பதக்கம் (Gold), இரண்டாவதாக வந்தால் வெள்ளிப் பதக்கம் (Silver) மூன்றாவதாக வந்தால் வெண்கலப் பதக்கம் (Bronze Medal) என வழங்கப்படும்.

ஒலிம்பிக் போட்டியிலே பங்கு பெறத் தகுதி பெறுவது (Quality) கடினமான காரியமாகும். அதிலும், முதலாவதாக வந்து தங்கப்பதக்கம் பெறுவது அதிலும் கடுமையான செயலாகும். ஆனால், ஒரே ஒலிம்பிக்கில் பல தங்கப் பதக்கங்கள் பெறுவது என்றால் அந்த வீரர்கள், வீராங்கனைகள் எவ்வளவு திறமையும் ஆற்றலும் படைத்தவர்களாக இருந்திருக்க வேண்டும்?

ஒரே ஒலிம்பிக் பந்தயத்தில் பல தங்கப் பதக்கங்களை வென்றவர்கள்.

1. ஜெசி ஓவன்ஸ் என்ற அமெரிக்க வீரர், 1936 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொண்டு 4 தங்கப் பதக்கங்களை வென்றார். அத்துடன் அந்தப் போட்டிகளிலும் ஒலிம்பிக் சாதனைகள் (Records) ஏற்படுத்தி உலகை வியப்பில் ஆழ்த்தினார். அவர் வெற்றி பெற்ற நிகழ்ச்சிகள் :

1) 100 மீட்டர் ஓட்டம் 2) 200 மீட்டர் ஓட்டம், 3) நீளத் தாண்டுதல், 4) 4X100 மீட்டர் தொடரோட்டம்.

2. பிரான்சினா பிளாங்கர்ஸ் கோயன் (Francina Blankers Koen) நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த வீராங்கனை.

1948 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொண்டபோது, அவள் இரண்டு குழந்தையின் தாயாக இருந்தாள் அவள் 4 போட்டிகளில் வெற்றி பெற்று 4 தங்கப் பதக்கங்கள் பெற்றாள்.

1) 100 மீட்டர் ஓட்டம், 2) 200 மீட்டர் ஓட்டம், 3) 80 மீட்டர் தடை தாண்டி ஓட்டம், 4) 4X100மீட்டர் தொடரோட்டம்

3. மார்க் ஸ்பிட்ஸ் (Mark Spitz) என்ற அமெரிக்க வீரர் 1972 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக்கில் 7 தங்கப் பதக்கங்கள் நீச்சல் போட்டியில் பெற்றார்

4. நிக்கோலாய் ஆந்திரிபாஞேவ் (Nikolai Andrianov) என்ற ரஷ்ய வீரர். 1976 ஆம் ஆண்டு சீருடல் பயிற்சிப் போட்டிகளில் (Gymnastics) 7 பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்.

5. பாவோ நர்மி (Paavo Nurmi) எனும் பின்லாந்து ஓட்ட வீரர். மூன்று ஒலிம்பிக் பந்தயங்களில் கலந்து கொண்டு (1920, 1924, 1928) 9 தங்கப் பதக்கங்கள் 3 வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றிருக்கிறார்.

## 172) விளையாட்டுக்களில் உலகத்தில் சிறந்த நாடுகள்

1. உலகக் கால் பந்தாட்டப் போட்டியில் மூன்று முறை வெற்றி பெற்ற புகழை உடைய நாடு பிரேசில்.

வெற்றி பெற்ற ஆண்டுகள் 1958, 1961, 1970.

2. வளைகோல் பந்தாட்டத்தில் (Hockey) உலகத்திலேயே சிறந்து விளங்கிய நாடு இந்தியா.

இந்தியா 1928 ஆம் ஆண்டிலிருந்து 1960 வரை ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கங்களைப் பெற்று பெருமையுற்றிருக்கிறது.

3. கூடைப் பந்தாட்டத்தில் (Basket Ball) 1936 ஆம் ஆண்டிலிருந்து 1972ஆம் ஆண்டுவரை, அமெரிக்காவே தங்கப் பதக்கம் பெறும் வெற்றி நாடாக சிறந்து விளங்கியது.

1972 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா ரஷ்யாவிடம் தோற்றுவிட்டது. ஆனால் 1976 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் மீண்டும் அமெரிக்காவே வெற்றி பெற்றது

4 சதுரங்கம் என்றால், சிறப்பு மிக்க வெற்றி நாடாக விளங்குவது ரஷ்யா. இன்று ரஷ்ய நாட்டு வீரர் அனடோல் கர்பூவ் என்பவர், உலகத்தில் சிறந்த ஆட்டக்காரராக, வெற்றி வீரராக விளங்குகிறார்.

## 173) நிரந்தர ஆட்டக்காரர்களும், மாற்று ஆட்டக்காரர்களும்
(Regular Players & Substitutes)

| ஆட்டம் | நிரந்தர ஆட்டக்காரர்கள் | மாற்று ஆட்டக்காரர்கள் |
|---|---|---|
| 1. கைப்பந்தாட்டம் | 6 | 6 |
| 2 கூடைப் பந்தாட்டம் | 5 | 7 |

| | | | |
|---|---|---|---|
| 3. | கிரிக்கெட் | 11 | 2 |
| 4. | கால் பந்தாட்டம் | 11 | 2 |
| 5. | வளைகோல் பந்தாட்டம் | 11 | 4 |
| 6. | சடுகுடு ஆட்டம் | 7 | 5 |
| 7. | கோ-கோ ஆட்டம் | 9 | 3 |

174) பந்தும் எடையும் அளவும்

| பந்து | எடை | அளவு |
|---|---|---|

1. கிரிக்கெட் பந்து : $5\frac{1}{2}$ முதல் $5\frac{3}{4}$ அவுன்சு $8\frac{13}{16}$ முதல் 9 அங்குலம்.
2. கைப்பந்து : 9 முதல் 10 அவுன்சு 26" முதல் 28" வரை
3. கூடைப்பந்து : 600 முதல் 650 கிராம் 75 செ.மீ. முதல் 78 செ.மீ. வரை
4. வளைகோல் பந்து : $5\frac{1}{2}$ முதல் $5\frac{3}{4}$ அவுன்சு $8\frac{13}{16}$ முதல் $9\frac{1}{4}$"
5. கால்பந்து : 14 முதல் 10 அவுன்சு 27" 28" வரை
6. டென்னிஸ் பந்து : 585 கிராம் $2\frac{3}{4}$" $2\frac{1}{2}$" வரை
7. வளையப்பந்து : 7 முதல் 9 அவுன்சு 7" விட்டம் $1\frac{1}{4}$ அங்குலம் கனம்.
8. எறிபந்து : 14 முதல் 16 அவுன்சு 27" முதல் 29"

175) 1979ஆம் ஆண்டு அர்ஜுனா விருதுபெற்ற தமிழ்நாட்டு வீரர்கள்

1. R. ஞானசேகரன்—விரைவோட்டம்
2. ரமணாராவ் —கைப்பந்தாட்டம்
3. தமிழ்ச்செல்வன் —எடைத்தூக்கும் போட்டி
4. E. கருணாகரன் —எடைதூக்கும் போட்டி

## 176) உடற்கல்விக் கல்லூரிகள்

உடற்கல்வி ஆசிரியர்களை உருவாக்கும் நான்கு உடற்கல்விக் கல்லூரிகள் தமிழகத்தில் இருக்கின்றன. அவை

1. சென்னையில் உள்ள ஒய். எம். சி. ஏ. உடற்கல்விக் கல்லூரி

முதல்வர் : டாக்டர் J. டேவிட்மேனியல்ராஜ்.

2 காரைக்குடியில் உள்ள அழகப்பா உடற்கல்விக் கல்லூரி, முதல்வர் : A. ஆதிச்சபிள்ளை.

3. கோயம்புத்தூரில் உள்ள மாருதி உடற்கல்விக் கல்லூரி, முதல்வர் : N. கிருஷ்ணமூர்த்தி.

4. அண்ணாமலைப் பல்கலைக்கழக உடற்கல்வித் துறை' பேராசிரியர் PR. ராமநாதன்.

❋ ❋ ❋

## 177) விளையாட்டுக்களும் கேடயங்களும்

1. வளைகோல் பந்தாட்டத்திற்குரிய கேடயங்கள்

1. பெய்ட்டன் கோப்பை
2. ஆகாகான் கோப்பை
3. நேரு தங்கக் கோப்பை
4. உபயதுல்லா தங்கக் கோப்பை
5. உலகக் கோப்பை (World Cup)
6. ரேனே பிராங்க் தங்கக் கோப்பை
7. முருகப்பா தங்கக் கோப்பை

❋ ❋ ❋

## 178) கிரிக்கெட் ஆட்டம்

1. கோபாலன் கோப்பை — இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்குமிடையே நடக்கும் போட்டி.

2. ரஞ்சித் கோப்பை
3. துலிப் கோப்பை
4. புருடன்சியல் கோப்பை

● ● ●

179) கூடைப் பந்தாட்டம்

1. எட்வர்ட் வில்லியம் டாட் நினைவுக் கோப்பை
2. பசலட் ஜா கோப்பை (பெண்களுக்குரியது)
3. C. C. ஆபிரகாம் கோப்பை
4. அகில உலகக் கோப்பைப் பந்தயம் (World Cup)

● ● ●

180) சிறந்த கோகோ ஆட்டத்திற்கான விருதுகள்

1. ஆண்களில் சிறந்த ஆட்டக்காரர்-ஏகலைவன் விருது
2. பெண்களுக்கான விருது-ராணி லட்சுமி விருது
3. சிறுவர்களுக்கானது-வீர அபிமன்யு விருது
4. சிறுமியர்க்குரியது-மகாலட்சுமி விருது

● ● ●

181) இந்திய விளையாட்டுக்கள்: இந்தியாவில் தோன்றியவை என்று சிறப்பாகப் புகழப்படும் விளையாட்டுக்களில் மிகவும் முக்கியமானவை சடுகுடு ஆட்டம (கபாடி), கோ-கோ ஆட்டம்.

● ● ●

182) நம்நாட்டிலே 'பூனா' (Pona) என்று ஒரு ஆட்டம் ஆடப்பெற்று வந்தது. அதைக் கொண்டு சென்ற ஆங்கி

லேயர்கள், இங்கிலாந்திலே பேட்மின்டன் (Badminton) என்ற இடத்தில் முதன் முதலாக ஆடினார்கள். ஆகவே, அந்த இடத்தின் பெயரே ஆட்டத்திற்கும் வந்து, கடைசியாக பேட்மின்டன் என்ற பெயரே நிலைத்துப் போய் விட்டது.

* * *

183) சதுரங்கம் : (Chess) என்ற ஆட்டம் நம் நாட்டில் தான் தோன்றியது. பிறகு அரேபியா பாலஸ்தீனம் போன்ற நாடுகளுக்கும், மேலை நாடுகளுக்கும் பரவியது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள்.

* * *

184) குதிரைப் பந்தாட்டம் (Polo) : நம் நாட்டில் தான் தோன்றியது என்று வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன.

* * *

185) வளைகோல் பந்தாட்டம் [Hockey] இங்கிலாந்தில் உருவாவதற்கு முன், இதே போன்ற ஒரு ஆட்டம் நம் நாட்டில் ஆடப்பெற்று வந்தது. அதற்குப் பெயர் கிடோ கண்டி [Khiuo-Kandi] என்று கூறுகிறார்கள்.

* * *

186) இந்திய மக்கள், பழங்காலத்திலிருந்தே விளையாட்டில் அதிகமாக ஈடுபட்டிருந்தனர் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் உண்டு.

நாளந்தா என்ற பல்கலைக் கழகம் என்று ஒன்று இருந்தது என்று நாம் சரித்திர பாடத்தில் படித்திருக்கிறோம். அதனை பார்வையிட்ட சீனயாத்திரிகர் ஒருவர் எழுதிய குறிப்பின் மூலம், அங்கு ஆடப்பட்டு வந்த ஆட்டங்களை நாம் அறிந்து கொள்ளலாம்.

நாளந்தா பல்கலைக் கழக மாணவர்கள் விளையாடிய விளையாட்டுக்கள் பலவகை.

1. பந்து விளையாட்டுக்கள்
2. வில் போட்டி
3. கோலிக்குண்டு ஆடுதல்
4. தேரோட்டப் போட்டி
5. யானையேற்றம்
6. கத்திச் சண்டை
7. குதிரைகளுக்கும் வண்டிகளுக்கும் முன்னால் ஓடுதல்
8. கைகளை மடக்கிப் பலம் பார்த்தல்
9. மல்யுத்தம் செய்தல்
10. வெறுங்கையால் குத்துச் சண்டை போடுதல்

❋ ❋ ❋

## 187) இந்தியர்கள் அதிகம் விரும்பி ஆடுகின்ற விளையாட்டுக்கள்

1. சடுகுடு (கபாடி) 2. கால் பந்தாட்டம் 3. கைப் பந்தாட்டம் 4. வளைகோல் பந்தாட்டம் 5. கிரிக்கெட் 6. டென்னிஸ் 7. கோகோ ஆட்டம் 8. மல்யுத்தம் 9. குதிரைப் பந்தாட்டம்.

❋ ❋ ❋

188) 1928ஆம் ஆண்டுதான், ஒலிம்பிக் பந்தயத்தில் பெண்களும் பங்கு கொண்டு போட்டியிடலாம் என்ற அனுமதி வழங்கப்பட்டது.

1928ஆம் ஆண்டு பெண்கள் போட்டியிட, 6 நிகழ்ச்சிகள் (Events) மட்டுமே இருந்தன.

அவை 100 மீட்டர் ஓட்டம், 800 மீட்டர் ஓட்டம், 80 மீட்டர் தடை தாண்டி ஓட்டம் (Hurdles), 4X100 மீட்டர் தொடரோட்டம், உயரத் தாண்டல், தட்டெறிதல் (Discus) ஆகும்

அதற்குப் பிறகு 9 புதிய போட்டி நிகழ்ச்சிகள் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

189) மாரதான் ஓட்டப் போட்டியென்றால், வீரர்கள் ஓடி முடிக்க வேண்டிய தூரம் 26 மைல் 385 கெஜ தூரமாகும்.

190) ஆங்கிலக் கால்வாய் (English channel), என்பது பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் உள்ள கால்வாய்ஆகும். அதன் தூரம் 35 கி. மீட்டர் ஆகும்.

191) யோகாசனங்களின் மொத்தம் என்று கணக்கிடப் பட்டுள்ள எண்ணிக்கை 72 ஆகும்.

192) மல்யுத்தப் போட்டியில் ஒரு ரவுண்டு (Round) சண்டை போடுகிறார்கள் என்றால் அந்த ஒரு ரவுண்டுக்குரிய நேரம் 3 நிமிடங்கள் ஆகும்.

**விளையாட்டுக் கழகத்தின் தலைவர்களில் சிலர்**

193) அகில உலக வளைகோல் பந்தாட்டக் கழகத்தின் தலைவர் ரேனே பிராங்க் [Rene Frank].

* * *

194) அகில உலகக் கால் பந்தாட்டக் கழகத் தலைவர் ஜாவோ ஹேவாலஞ்ச் (Javo Havelange).

* * *

195) அகில உலக சதுரங்க கழகத்தின் (Chess) தலைவர் டாக்டர் மாக்ஸ் ஈவ் (Dr. Max Eve).

* * *

196) அகில உலக மேசைப் பந்தாட்டக் கழகத்தின் தலைவர் இவோர் மாண்டேகு (Ivor Mantague)

* * *

197) அகில உலக ஒலிம்பிக் கழகத்தின் தலைவர் ஜுவான் அந்தோனியோ சமாரஞ்ச்.

* * *

198) இந்திய வளைகோல் பந்தாட்டக் கழகத்தின் தலைவர் மகாஜன்.

199) அகில இந்திய உடற் கல்விக் கல்லூரி முதல்வர்கள் கழகத்தின் தலைவர் டாக்டர் ராப்சன். இவர், தற்பொழுது இந்திய அரசினரால் நடத்தப்படும் குவாலியரில் உள்ள லட்சுமிபாய் உடற் கல்விக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றுகிறார்.

இவர் காரைக்குடி அழகப்பா உடற் கல்விக் கல்லூரியில் 20 ஆண்டுகள் முதல்வராகப் பணியாற்றி இருக்கிறார்.

2 முறை மேல் படிப்புக்காக, சிறந்த உடற் கல்வி நிபுணர் என்பதற்காக, முழு ஸ்காலர்ஷிப் தொகை பெற்று, அமெரிக்கா சென்று வந்திருக்கிறார்.

சிறந்த உடற்கல்வியாளர் என்று புகழப்படும் ராப்சன் அவர்கள், மிகுந்த கண்டிப்பானவர் நேரந்தவறாது பணியாற்றுபவர் உடற்கல்விப் பணியை உயிர்ப்பணி எனக் கொண்டவர் என்பதாக மாணவர்கள் பொதுமக்கள் பலராலும் போற்றப்படுபவர் ஆவார்.

❀ ❀ ❀

200) விளையாட்டுத் துறையில் வீராங்கனைகள் சிலர்

1. ஆங்கிலக் கால்வாயை முதன் முதலில் நீந்திக் கடந்த வீராங்கனை ஜெர்ட்ரூட் எடர்லி.

2. ஆங்கிலக் கால்வாயை முதன் முதலில் நீந்திக் கடந்த முதல் இந்தியப் பெண் திருமதி ஆர்தி குப்தா.

3. 6 அடி உயரத்திற்கு மேல் முதலில் தாண்டி சாதனை புரிந்த பெண் ருமேனியாவைச் சேர்ந்த அயலந்தா பாலஸ் (Iolanda Balas). தாண்டிய உயரம் 6' 2¾".

4. கிரேக்க நாட்டில் பெண்களுக்கான ஒலிம்பிக் பந்தயம் தோன்றக் காரணமாயிருந்த வீராங்கனை கலிப்போடோமியா.

5. இங்கிலாந்து அரச குடும்பத்தில் இருந்து முதன் முதலாக ஒலிம்பிக் பந்தயங்களில் கலந்து கொண்ட முதல் பெண் இளவரசி ஆன் [Anne]. இவர் 1976 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயப் போட்டிகளில் கலந்து கொண்டார்.

6. ஒரு மைல் தூரத்தை 5 நிமிடங்களுக்குள் ஓடி முடித்த வீராங்கனை தியாறு சூசன் லீதர் என்பவர்.

7. 16 ஆண்டுகளாக ஓட்டப் பந்தயத்தில் பங்கு கொண்டு (1964, 1968, 1972, 1976) 200, 400 மீட்டர் ஓட்டங்களில் உலக சாதனை புரிந்தவர் (World Record.) 7 வெற்றிப் பதக்கங்களைப் பெற்ற முதல் பெண்மணி இரினா ஸ்விஸ்ஸ்கா [Irena Szewinska] போலந்து நாட்டைச் சேர்ந்தவர்.

8. கோல்ப் ஆட்டத்தை ஆடிய முதல் அரசி [முதல் பெண்மணி] ஸ்காட்லாந்து நாட்டை ஆண்ட மேரி என்பவர்.

9. இரண்டு ஒலிம்பிக் பந்தயங்களில் தொடர்ந்தாற்போல் 100 மீட்டர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்ற வீராங்கனை, அமெரிக்காவைச் சேர்ந்த ஓமியா டையஸ் [Wyomia Tyus]. 1964 ஆம் ஆண்டும், 1938, ஆம் ஆண்டும்.

* * *

## 201] விளையாட்டுக்களும் வெற்றிக் கோப்பைகளும் [Trophies]

### கிரிக்கெட்

1. புருடென்யல் கோப்பை [Prudential Cup] புருடென்சியல் அஸ்யூரன்ஸ் கம்பெனியரால் வழங்கப்பெற்ற இந்தக் கோப்பை, உலக நாடுகளுக்கிடையே நடக்கும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிக்காக அளிக்கப்படுகிறது.

2. ரஞ்சித் கோப்பை [Ranjit Trophy] இந்தியா வில் நடக்கின்ற கிரிக்கெட் போட்டிக்குரியதாகும்.

3. விஸ்ஸிக் கோப்பை [Vizzi Trophy] : இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கிடையே நடைபெறுகின்ற கிரிக்கெட் போட்டிக்குரிய பரிசாகும்.

4. ராமச்சந்திர ராவ் கோப்பை : இந்தியாவில் உள்ள மாகாணங்களில் முதலாவதாக வந்த பள்ளிகளுக்கிடையே நடக்கும் போட்டிக்கு [Inter state schools] வழங்கப் படுகின்ற கோப்பையாகும்.

5. கோபாலன் கேடயம் [Gopalan Trophy] : சென்னைக்கும் இலங்கைக்கும் இடையே நடை பெறுகின்ற கிரிக்கெட் போட்டிக்குரிய கேடயமாகும்.

கால் பந்தாட்ட வெற்றிக் கோப்பைகள்

1. ஜூலிஸ் ரிம்மட் கோப்பை [Jules Rimmet Cup] : உலக நாடுகளுக்கிடையே நடக்கும் கால் பந்தாட்டத்திற்கு வழங்கப்படுகின்ற கோப்பையாகும்

2. சந்தோஷ் கோப்பை [Santhosh Trophy] : இந்தியாவில் உள்ள மாகாணங்களுக்கிடையே நடக்கின்ற கால் பந்தாட்டப் போட்டிக்குரிய கோப்பையாகும்.

3. டியூரண்ட் கோப்பை [Durand Trophy]: இந்தியா வில் உள்ள கால்பந்தாட்ட சங்கங்களுக்கிடையே நடைபெறும் போட்டிக்கு உரிய பரிசுக் கோப்பையாகும்.

4. சுபர்டோ கோப்பை (Suborto Cup): இந்தியாவில் உள்ள மாணவர்களுக்கு இடையே நடக்கும் மாநிலத்தில் [முதலாவதாக பள்ளி] அகில இந்திய பள்ளி மாணவர்களின் கால் பந்தாட்டப் போட்டிக்கான கோப்பையாகும்.

202) **உலகில் சிறந்த ஒலிம்பிக் பந்தய வீரர்கள் சிலர்**

1. **விக்டர் சானியேவ்** என்ற ரஷ்யர், மும்முறைத் தாண்டும் போட்டியில் [Triple Jump] இதுவரை யாரும் செய்யாத சாதனை ஒன்றைச் செய்திருக்கிறார்.

இவர் தொடர்ந்து மூன்று ஒலிம்பிக் பந்தயங்களிலும், (1968, 1972, 1976) வெற்றி பெற்று தங்கப் பதக்கங்களைப் பெற்றிருக்கிறார் 1980 ல் வெள்ளிப் பதக்கம்.

2. ஆல்பிரட் ஓர்ட்டர் (Alfred Oertor) என்ற அமெரிக்கர், தட்டெறியும் போட்டியில் (Discus Throw) நான்கு ஒலிம்பிக் பந்தயங்களில் வெற்றி பெற்று, 4 தங்கப் பதக்கத்தைப் பெற்றிருக்கிறார்.

அவர் வெற்றி பெற்ற ஒலிம்பிக் பந்தயங்கள் 1956, 1960, 1964, 1968.

3. லாசி வீரன் [Lasse Viren] எனும் பின்லாந்து ஓட்டக்காரர் இரண்டு ஒலிம்பிக் பந்தயங்களில் தொடர்ந்து 5000, 10,000 மீட்டர் ஓட்டங்களில் வெற்றி பெற்று புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார். வெற்றி பெற்ற பந்தய ஆண்டுகள் 1972, 1976.

* * *

203) விளையாட்டுக்கள் ஒவ்வொன்றும் எந்தெந்த ஆண்டுகளில் தொடங்கின அல்லது சிறப்பு வடிவம் பெற்று விளங்கின என்று ஆராய்ச்சி செய்த எய்லர் மார்வின் என்பவர் தந்த தகவல் குறிப்பினை நீங்கள் கீழே காணலாம்.

தோன்றிய வருடத்தில் வித்தியாசம் இருப்பதால் இரண்டு குறிப்புள்ள வருடங்கள் தரப்பட்டிருக்கின்றன.

| விளையாட்டுக்கள் | தோன்றிய ஆண்டு |
|---|---|
| எறி, தாண்டு, கள நிகழ்ச்சிகள் | (900 கி மு) (அ) 776 |
| மல்யுத்தம் | (2160 கி மு) (அ) 1780 |
| குத்துச்சண்டை | (2160 கி மு) (அ) 850 |
| ஓடும் போட்டி நிகழ்ச்சிகள் | (900 கி மு) (அ) 776 |
| வேட்டையாடுதல் | (2357 கி மு) (அ) 400 |
| பட்டம் விடுதல் | [1121 கி மு] (அ) 221 |
| கோழிச் சண்டை | கி பி 77 |
| குதிரை சவாரிப் போட்டி | [648 கி மு] (அ) 1174 கி பி |
| டென்னிஸ் | கி பி 1230 |
| லான் பவுலிங் | கி பி 1366 |
| கோயட்ஸ் | [450 கி மு] (அ) 1409 |
| கோல்ப் | 1380] (அ) கி பி 1457 |
| குறியுடன் துப்பாக்கி சுடுதல் | 1498 |
| கத்திச் சண்டை (Fencing) | 1517 |
| பந்து உருட்டல் (Hurling) | 1527 |
| வில்வித்தை | [1530] அல்லது 1585 |
| பில்லியர்ட்ஸ் | [1520] ,, 1590 |
| போலோ | [475] ,, 1596 |
| பனிக்கட்டி சறுக்கல் | [500] ,, 1659 |
| கிரிக்கெட் | [1600] ,, 1744 |
| படகு விடும் போட்டி | [1675] ,, 1775 |
| ஸ்டீபில் சேசிங் | [1740] ,, 1870 |
| மலையேற்றப் போட்டி | [1780] ,, 1811 |
| ஜிம்னாஸ்டிக்ஸ் | [1790] ,, 1816 |

| | | | |
|---|---|---|---|
| புருப் போட்டி | 1825 | | |
| லாக்ரோசி | [1400] | அல்லது | 183 |
| துடுப்புப் போட்டி (Rowing) | 1839 | | |
| கைஎறிப் பந்தாட்டம் | [1500] | ,, | 1840 |
| தளப்பந்தாட்டம் | [1750] | ,, | 1846 |
| ரக்பி | 1846 | | |
| எடை தூக்கும் போட்டி | [1790] | ,, | 1859 |
| கால் பந்தாட்டம் | 1859 | | |
| நீச்சல் போட்டி | | | 1859 |
| சைக்கிள் போட்டி | 1868 | | |
| இறகுப் பந்தாட்டம் | 1870 | | |
| புல்தரை டென்னிஸ் ஆட்டம் | 1873 | | |
| தாய் போட்டி | [1810] | ,, | 1876 |
| ஜூடோ | 1882 | | |
| நீர்ப் பந்தாட்டம் | 1885 | | |
| வளைகோல் பந்தாட்டம் | 1886 | | |
| மேசைப் பந்தாட்டம் | 1889 | | |
| கூடைப் பந்தாட்டம் | 1891 | | |
| கைப் பந்தாட்டம் | 1895 | | |
| பேடில் டென்னிஸ் | 1898 | | |
| மோட்டார் சைக்கிள் போட்டி | 1902 | | |
| மோட்டார் படகுப் போட்டி | 1904 | | |
| மென் பந்தாட்டம் | (1890) | ,, | 1928 |

**எய்லர் மார்வின் என்பவர் ஆராய்ச்சியின்படி தொகுக்கப்பட்டது.**

## 204) சடுகுடு சர்வதேச ஆட்டமாகிறது !

சடுகுடு ஆட்டம், 1936ம் ஆண்டே ஜெர்மனி நாட்டில் ஆடிக் காட்டப்பட்டதாகவும், அதை அந்தநாட்டு சர்வாதிகாரி ஹிட்லர் பார்த்து மகிழ்ந்ததாகவும் சரித்திரம் கூறுகிறது.

அப்பொழுதே ஒலிம்பிக் விளையாட்டுக்களில் சேர்க்க வேண்டும் என்ற முயற்சியும் எழுச்சியும் ஏற்பட்டிருந்தது, என்றாலும் ஆடும் நாடுகள் உரிய எண்ணிக்கையில் இல்லை என்பதால், உலக அளவில் ஏற்றுக் கொள்ள வகையில்லாமல் போயிற்று.

1982ல் ஆசிய விளையாட்டுக்களை நடத்தும் பொறுப் பேற்ற இந்தியாவில், இது ஒரு காட்சிப் போட்டி ஆட்டமாக ஆடி ஆறு நாடுகளுக்கு மேல் கலந்து கொண்டதன் காரணமாக, சடுகுடு ஆட்டம் சர்வதேச அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது.

1986ம் ஆண்டில் சியோல் நகரத்தில் நடக்கும் 10வது ஆசிய விளையாட்டுக்களில் ஒரு ஆட்டமாக இடம் பெறும் என்ற நம்பிக்கை இப்பொழுது தோன்றியிருக்கிறது.

* * *

## 205) நிபுணர் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்தை, இத்தகைய பிரமாண்டமான அமைப்பிலே, பார்த்த எல்லோரும் பாராட்டும் வண்ணம் உருவாக்கிய நிபுணர் ரிஷி என்பவர்.

வெளிநாடுகள் எதற்கும் போகாத, தூய இந்தியர் இவர். இவரது பொறியியல் நுட்பத்திறன், இந்திய மூளையின் பிரசித்தத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

206) ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வளைகோல் பந்தாட்டத்தில் வெற்றி நாடுகளும் முடிவும்.

| நடந்த இடம் | ஆண்டு | இடம் | முதல் இடம் | இரண்டாம் இடம் | மூன்றும் இடம் |
|---|---|---|---|---|---|
| டெல்லி | 1951 | இந்தியா | சேர்க்கப்படவில்லை. | | |
| மணிலா | 1954 | பிலிப்பைன்ஸ் | சேர்க்கப்படவில்லை. | | |
| டோக்கியோ | 1958 | ஜப்பான் | பாகிஸ்தான் | இந்தியா | தென் கொரியா |
| ஜகார்த்தா | 1962 | இந்தோனேஷியா | பாகிஸ்தான் | இந்தியா | மலேசியா |
| பாங்காங் | 1966 | தாய்லாந்து | இந்தியா | பாகிஸ்தான் | மலேசியா |
| பாங்காங் | 19 0 | தாய்லாந்து | பாகிஸ்தான் | இந்தியா | ஜப்பான் |
| டெஹ்ரான் | 1974 | இரான் | பாகிஸ்தான் | இந்தியா | மலேசியா |
| பாங்காங் | 1978 | தாய்லாந்து | பாகிஸ்தான் | இந்தியா | மலேசியா |
| டெல்லி | 1982 | இந்தியா | பாகிஸ்தான் | இந்தியா | மலேசியா |

207) ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கால்பந்தாட்டத்தில் வெற்றி நாடுகளும் முடிவும்.

| நடந்த இடம் | ஆண்டு | இடம் | முதல் இடம் | இரண்டாவது இடம் | மூன்றாவது இடம் |
|---|---|---|---|---|---|
| டெல்லி | 1951 | இந்தியா | இந்தியா | இரான் | ஜப்பான் |
| மணிலா | 1954 | பிலிப்பைன்ஸ் | சீனா | தென் கொரியா | இந்தோனேசியா |
| டோக்கியோ | 1958 | ஜப்பான் | சீனா | தென் கொரியா | இந்தோனேசியா |
| ஜகார்தா | 1932 | இந்தோனேசியா | இந்தியா | தென்கொரியா | மலேசியா |
| பாங்காங் | 1966 | தாய்லாந்து | பர்மா | இரான் | ஜப்பான் |
| பாங்காங் | 1970 | தாய்லாந்து | பர்மா & கொரியா | — | இந்தியா |
| டெஹ்ரான் | 1974 | இரான் | இரான் | இஸ்ரேல் | மலேசியா |
| பாங்காங் | 1978 | தாய்லாந்து | தென்கொரியா & வடகொரியா | — | சீனா |
| டெல்லி | 1982 | இந்தியா | இராக் | குவைத் | சவூதி அரேபியா |

208) மேசைப் பந்தாட்டத்தில் பயன்படும் மட்டையின் இருபுறத்திலும் ரப்பர் ஒட்டப் பெற்ற மட்டையை முதன் முதலில் பயன்படுத்தி ஆடியவர் E. C. கூடே என்பவர். பயன்படுத்திய ஆண்டு 1903.

209) கோகோ ஆட்டம் திருந்திய அமைப்பு பெற்று நவீன நுண்திறன்களைப் புகுத்தி முதன் முதலாக ஆடப் பெற்ற ஆண்டு 1924 ஆகும்.

210) 1960ம் ஆண்டு தான் அகில இந்திய கோகோ கழகம் அமைக்கப்பட்டது.

211) 1952ம் ஆண்டில் அகில இந்திய கபாடிக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் முதல் தலைவராகப் பொறுப் பேற்றவர் L. K. காட்போல் என்பவர்.

212) கபாடி ஆட்டத்திற்கு முதன் முதலாக திருந்திய புது விதிகள் அமைக்கப்பட்டன. அந்த அரும்பணியில் ஈடுபட்டு பெருமை பெற்றவர்கள். K. O. R. பணாரியே; யஷ்வந்தராவ் பதக்; S. S. வைஷ்யர்; K. K. வித்ரே.

213) அகில இந்திய பள்ளி மாணவர்களுக்காக நடைபெறும் போட்டிகளில், கபாடி ஆட்டம் 1962ம் ஆண்டு தான் சேர்க்கப்பட்டது.

214) இறகுப் பந்தாட்டத்தில், உலக அளவில் சிறந்த போட்டி விருதான **தாமஸ் கோப்பை** 1939ம் ஆண்டு தான் வழங்கப்பட்டது. அதை வழங்கியவர் **சர் ஜார்ஜ் தாமஸ் பிரானட்.**

✱ ✱ ✱

215) மேசைப் பந்தாட்டத்திற்கான மட்டையின் ஸ்பான்ச் வைத்துக்கொடுத்த பெருமை J. ஜேக்கஸ்ட் & சன்ஸ் எனும் நிறுவனத்தையே சாரும். அதைக் கொண்டு முதலில் ஆடி, அந்தப் பெருமையைப் பெற்றவர் **மொடாகு** என்பவர். ஆடிய ஆண்டு 1926.

✱ ✱ ✱

216) மல்யுத்தம் உலகப் பிரசித்திப் பெற்றப் போட்டியாகும். இந்திய மல்யுத்தமானது நான்கு வகை பிரிவுகளைக் கொண்டு விளங்கியிருக்கிறது. அவை **ஜமவந்தி; ஹனுமந்தி; ஜராசந்தி; பீமசேனி**

✱ ✱ ✱

217) ஹேட்டிரிக் (Hat Trick) என்ற திறமையான ஆட்டம் எனப் பெயர் வர, முதன்முதலாகப் புகழுடன் ஆடியவர் F.R ஸ்போபோர்த் என்பவர். ஆஸ்திரேலியர், 1878-79ம் ஆண்டு இந்த சாதனையை ஏற்படுத்தி கிரிக்கெட் வரலாற்றில் புகழ் மிக்கப் பந்து வீச்சாளரானார்.

✱ ✱ ✱

218) 'ஆசியக் கோப்பை' எனும் புகழ்மிக்க கேடயம் ஆசிய நாடுகளுக்கிடையே நடைபெறும் கால் பந்தாட்டப்

போட்டிக்குரியதாகும். இது 1956ம் ஆண்டு தான் தொடங்கப்பட்டது. ஆசிய விளையாட்டுக்கழகத்தால் நடத்தப் படும் இப்போட்டி, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடை பெறுவதாகும்.

❋ ❋ ❋

219) முதன் முதலாக விளையாட்டுப் பற்றிய வர்ணனை ரேடியோவில் இடம் பெற்ற நாடு இங்கிலாந்து டிவிக்கன் ஹாம் என்ற பகுதியில் 1972ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 15ந் தேதி வர்ணனை நிகழ்த்தப்பட்டது. முதன் முதலாக வர்ணனை யாளர் என்ற புகழ் பெற்றவர் டெடிவேக்லாம் என்பவர்.

❋ ❋ ❋

220) ஜூடோ எனும் போர் முறைப் போட்டி நிகழ்ச் சியைக் கண்டு பிடித்தவர் டாக்டர் ஜுஜாராகானோ அந்த ஆண்டு 1882 ஆகும். JU என்றால் பெருந்தன்மையான என்றும், DO என்றால் வழியை விதி என்றும் பொருள். ஜூடோவின் முக்கிய நோக்கம் என்னவென்றால் குறைந்த சக்தியைப் பயன்படுத்தி, நிறைந்த சாதனையை செய்திட வேண்டும் என்பதுதான்.

❋ ❋ ❋

221) ஒலிம்பிக் பந்தயத்தில் ஜூடோ போட்டியானது 1964ம் ஆண்டு இணைக்கப்பட்டது.

❋ ❋ ❋

222) இந்தியாவின் சிறந்த டென்னிஸ் ஆட்டக்காரர் சி. கிருஷ்ணன், தனது 16வது வயதிலேயே இந்தியாவின்

சார்பாகப் போட்டியிடும் சிறந்த ஆட்டக்காரராக விளங்கி யிருக்கிறார்

பல ஆண்டுகளாக டேவிஸ் கோப்பைப் போட்டிக்காக இந்திய ஆட்டக்காரராகப் போட்டியிட்டிருக்கிறார். அவரது சாதனை மிகப்பெரிய சாதனைதான்.

ஒற்றையர் போட்டியில் 20 முறை தோற்று 49 முறை வென்றிருக்கிறார்.

இரட்டையர் போட்டியில் 9 முறை தோற்று 16 முறை வென்றிருக்கிறார்.

* * *

223) டென்னிஸ் ஆட்டத்தில் உலக அளவில் புகழ் பெற்ற வெற்றிக்கோப்பைகளுக்காகப் போட்டிகள் நடைபெறு கின்றன

**டேவிஸ் கோப்பை :** இதனை வழங்கியவர் அமெரிக்கரான டிவைட் டேவிஸ் என்பவர். இந்த வெற்றிக் கோப்பை உலக நாடுகளுக்கிடையே நடைபெறும் டென்னிஸ் போட்டியாகும். இதற்கு அகில உலக பசும்புல் தரை டென்னிஸ் போட்டி என்று மற்றொரு பெயர் உண்டு.

**ஒயிட்மேன் கோப்பை :** இதனை வழங்கியவர் அமெரிக்க ரான கேஸல் ஒயிட்மேன் என்பவர். இந்தக் கோப்பைக்கான போட்டிகள், அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே பெண்களுக்காக நடைபெறுகின்ற டென்னிஸ் போட்டியாகும்.

**பெடரேஷன் கோப்பை :** பெண்களுக்கான டென்னிஸ் போட்டி. உலக நாடுகளுக்கிடையேயுள்ள வீராங்கனைகளுக் காக நடைபெறும் போட்டிக்கான கோப்பை இது.

**கிங்ஸ் கோப்பை :** இது ஸ்வீடன் தேசத்து மன்னரால் வழங்கப்பட்ட கேடயமாகும். இது டேவிஸ் கோப்பைக்கான போட்டி போல, உலக நாடுகளுக்கு இடையே நடைபெறுகின்ற டென்னிஸ் போட்டியாகும்.

* * *

224) 100 மீட்டர் ஓட்டத்தை 11 வினாடிகளுக்குள் முதலாவதாக ஓடி முடித்து, புதிய சாதனை நிகழ்த்திய பெருமையைப் பெற்ற வீராங்கனை மார்லியஸ் ஓல்ஸ்னர். மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பள்ளி மாணவி. ஓடி நிகழ்த்திய சாதனையின் நேரம் 10.88 வினாடிகள்.

* * *

225) பெண்களுக்கான உயரம் தாண்டும் போட்டியில் உலகசாதனை 6 அடி 6½ அங்குலம். இந்த சாதனையை உண்டாக்கிய வீராங்கனையின் பெயர் **ரோஸ்மேரி ஆக்கர் மேன்.** இதில் என்ன சுவையான சேதி என்றால், இந்த வீராங்கனை, தனது உயரத்தை விட 10 அங்குலம் உயரம் அதிகமாகத் தாண்டி புகழ்பெற்றது தான்.

* * *

226) போலந்து நாட்டைச் சேர்ந்த இரினு ஸ்வின்ஸ்கா எனும் வீராங்கனை 200மீட்டர் தூரத்தை 22.37வினாடிகளில் ஓடி, உலக சாதனை ஒன்றை நிகழ்த்தினார். அப்பொழுது அந்தப் பெண்மணியின் வயது 31. நினைத்துப் பார்க்கவே முடியாத அற்புத சாதனையல்லவா!

* * *

227) ஓடுகளப் போட்டிகளில் கோல் ஊன்றித் தாண்டும் போட்டி, பார்க்க கவர்ச்சிகரமாய் தோன்றும் போட்டியாகும்.

உயர்க உயர்க என்னும் ஒலிம்பிக் போட்டியின் குறிக்கோளை நிறைவேற்றும் நிகழ்ச்சியாகவும் இது இருக்கிறது.

முதலில் மூங்கில் கோல் வைத்துக் கொண்டு தாண்டினார்கள் வீரர்கள் 1942ல் மூங்கில் கோலால் தாண்டி முதலில் உலக சாதனை நிகழ்த்தியவர் அமெரிக்கரான கர்னேலியஸ் வார்மர்டாம்' 1942ல் ஏற்படுத்தப்பட்ட 15 அடி $7\frac{3}{4}$ அங்குல சாதனை பல ஆண்டுகள் நிலைத்து நின்றது.

அதன் பிறகு அலுமினியம் மற்றும் அலாய் இரும்பால் ஆன கோல்கள் பயன்படுத்தப்பட்டன. 1961ம் ஆண்டில் இந்தக் கோல் மூலம் ஏற்படுத்தப்பட்ட புதிய சாதனை 15 அடி $10\frac{1}{4}$ அங்குலமாகும்.

அதனைத் தொடர்ந்து புதிய தாண்டும் கோல் கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது பைபர் கிளாஸ் கோல்கள் (கண்ணாடி நாரிழையால் ஆனது) அதன் மூலம் தாண்டிய உயரம் தற்போது 18 அடி $8\frac{1}{4}$ அங்குலம்.

இன்னும் உயரமாகத் தாண்டுபவர்கள், உலக சாதனை புரிவார்கள் என்று எண்ணுகின்ற புது யுகத்தில், நமது வீரர்கள் பழைய மூங்கில் கோல்களும் சரியாகக் கிடைக்காமல் திண்டாடி வருகின்றார்கள். இந்தப் பஞ்ச நிலையை நாம் எப்பொழுது தாண்டப் போகிறோம்!

* * *

228) குத்துச் சண்டைக்கான ஆரம்ப கால விதிகள் 1743ம் ஆண்டு தான் அறிமுகப் படுத்தப்பட்டன. அந்த விதிகளை உருவாக்கியவர் ஜேக்பிராட்டன் என்பவர்.

பிறகு, திருத்தமுற்ற புதிய குத்துச் சண்டைக்கான விதிகள் 1838ம் ஆண்டு உருவாக்கப்பட்டன. அதற்கு லண்டன் பிரைஸ் ரிங் விதிகள் என்பது பெயராகும்.

தற்பொழுது பின்பற்றப்படும் புதிய விதிமுறைகளுக்கு மார்க்யுஸ் ஆப் க்யூன்ஸ் பெர்ரி என்பது பெயர். இவற்றை உருவாக்கியவர் பெயர் ஜான் ஷெட்டோ டக்ளஸ் என்பதாகும். உருவாக்கிய ஆண்டு 1866-67 ஆகும்.

* * *

229) கிரிக்கெட் ஆட்டநேரத்தில், அடித்தாடிய பந்து காணாமல் போனால், 6 ஓட்டங்கள், (Six) அடித்தாடும் குழுவிற்குத் தரப்படும்.

பந்தைத் தடுத்தாடுவோர், பந்து காணாமல் போய் விட்டது என்று அறிவிப்பதற்குள்ளே, பந்தடித்தாடுபவர்கள் 6 ஓட்டங்களுக்கு மேல் ஓடி எடுத்திருந்தால், அப்படியே அத்தனை ஓட்டங்களும் குறிப்பேட்டில் சேர்த்துக் கொள்ளப் படும்.

* * *

230) கிரிக்கெட் ஆட்டப் போட்டியில், அகில இந்திய பல்கலைக் கழக மாணவர்கள் குழுவிற்கிடையே நடைபெறும் போட்டிக்காக வழங்கப்படும் வெற்றிக் கோப்பையின் பெயர் **விஸ்ஸி டிராபி** என்பதாகும்.

1966-67ம் ஆண்டு தொடங்கப் பெற்ற போட்டியில், முதன் முதல் வெற்றி பெற்ற அணி மேற்கு இந்தியப் பிரிவாகும். (West Zone)

* * *

231) வளைகோல் பந்தாட்டத்தில் இலக்குகளுக்கான வலை முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்ட ஆண்டு 1891 ஆம். பயன்படுத்திய இடம் இங்கிலாந்து ஆகும்.

232) முன்னாள் இந்திய கிரிக்கெட் குழுவின் தலைவராக இருந்தவர், குதிரைப்பந்தாட்டம் (Polo) ஆடிக்கொண்டிருந்த பொழுது இறந்து போனார். அவர் தான் இந்திய அணியின் முன்னாள் குழுத் தலைவரான பட்டாடி நவாப் என்பவரின் தந்தை பட்டாடி நவாப் (சீனியர்)

❀ ❀ ❀

233) மேசைப் பந்தாட்டத்தில் பயன்படும் பந்தின் விட்டம் 37 . 2லிருந்து 38 . 2 மி. மீ. ஆகும். அந்தப் பந்தின் எடையே 2 5 கிராம்கள் ஆகும். உலகப் புகழ் பெற்ற மேசைப் பந்தாட்டம் இதுவரை ஒலிம்பிக் பந்தயப் போட்டிகளில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

❀ ❀ ❀

234) டென்னிஸ் ஆட்டத்திற்கான புதிய விதிகள் முதன் முதலில் உருவாக்கப்பட்ட ஆண்டு 1878 ஆகும். இங்கிலாந்தில் உள்ள லார்ட்ஸ் மைதானத்தில் கிரிக்கெட் கமிட்டியாரால் உருவாக்கப்பட்டதாகும்.

❀ ❀ ❀

235) அகில உலகக் கைப்பந்தாட்டக் கழகம் 1947ம் ஆண்டு பாரிஸ் நகரில் அமைக்கப்பட்டது.

❀ ❀ ❀

236) அகில உலக எடைத்தூக்கும் கழகமானது 1920 ஆண்டுதான் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் ஒலிம்பிக் பந்தயத்திலோ 1896ம் ஆண்டே இணைக்கப்பட்ட பெருமையை எடைதூக்கும் நிகழ்ச்சி பெற்ற நிலையை

இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இந்த நிகழ்ச்சிப் போட்டியில் இந்தியா 1936ம் ஆண்டிலிருந்து தான் கலந்து கொண்டது.

* * *

237) அகில இந்திய மல்யுத்தக் கழகம் 1921ம் ஆண்டு தான் ஆரம்பிக்கப்பட்டது. அகில இந்திய மல்யுத்தக் கழகம் 1948ம் ஆண்டு தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் ஒலிம்பிக் பந்தயங்களில், ஒன்றாக ஏதென்ஸ் நகரில் நடந்த 1896ம் ஆண்டு முதல் ஒலிம்பிக் பந்தயத்திலேயே சேர்க்கப்பட்டதானது இதன் சிறப்பைக் குறிப்பதாகும்.

* * *

238) தேசிய வளைகோல் பந்தாட்டத்தின் ஆண்கள் போட்டிக்கான வெற்றிக் கேடயத்தின் பெயர் ரெங்கசாமிக் கோப்பையாகும்.

* * *

239) ஒலிம்பிக் போட்டிகளின் போது வீரர்கள், வீராங்கனைகள், அணி மேலாளர்கள், அதிகாரிகள் தனியாகத் தங்க முதன் முதலில் ஒலிம்பிக்கிராமம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1924. பாரிஸ் நகரத்தில் பந்தயம் நடந்த போது

* * *

240) குறைந்ததூரம் ஓடும் விரைவோட்டக்காரர்கள், துப்பாக்கிச் சத்தம் கேட்ட பிறகு, ஓட எடுத்துக் கொள்ளும் செயல்படும் நேரம் 0 . 37 வினாடிகள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.



திரு. எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் தமிழ் இலக்கியத்தில் விளையாட்டுத்துறை நூல்கள் அதிகமாக வெளிவர வேண்டும் என்ற முயற்சியில், இதுவரை 80க்கும் மேற்பட்ட நூல்களையும், 20க்கும் மேற்பட்ட கதை, கவிதை, நாடக நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். இவர் எழுதிய 'ஒலிம்பிக் பந்தயத்தின் கதை' எனும் நூல் 1977ம் ஆண்டும், 'விளையாட்டுக்களின் கதைகள்' எனும் நூல் 1981ம் ஆண்டும் தேசிய விருதினைப் பெற்று இருக்கின்றன.

தமிழிலும், உடற்கல்வித் துறையிலும், முதுகலைப் பட்டம் (M.A.,M.P.,Ed.) பெற்றுள்ள ஆசிரியர், வானொலி, டெலிவிஷன், வாரப்பத்திரிகைகளில் தொடர்ந்து விளையாட்டுத்துறை பற்றி பேசியும் எழுதியும் வருகிறார்.

தமிழில் முதன்முறையாக "விளையாட்டுக்களஞ்சியம்" எனும் விளையாட்டுத் துறை மாத இதழை 1977 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடத்தி பணியாற்றி வருகிறார்.

Grace Printers, 27, Subba Reddy Street, Madras-33.